
1926-28

16 3

N25·16·3

186256

# சில நாளுக்குத் தான்!!




எங்களின் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட "ஸி" (ரிஜிஸ்டர்)

## "டைம் பீஸ்"

விலை ரூ 2-8-0

இரண்டு வருஷம் உத்திரவாதம்.

ஒரு மாதத்திற்குள் ஆயிரம் கடியாரம் விற்பனையாகி விட்டது. முந்துங்கள். விலை 1-க்கு ரூபா 2—8—0.

பீடர் வாச் கம்பெனி,
தபால்பெட்டி நெ. 67,
மதராஸ்.


## ஸ்ரீமான் திவான்பஹதூர் நம்பெருமாள் செட்டிகாரு

இவர் நம்முடைய ஸபையில் வெகுநாளாக நிர்வாஹ கமிட்டியில் மெம்பராகவும் சிலவருஷங்களாக உப. அக்ராஸனாதிபதிகளில் ஒருவராகவுமிருந்து நாளது டிசம்பர் மீ 8வ காலை தன்னுடைய 69-வது வயதில் பரமபதத்தை அடைந்தார். அநேகமாக ஒவ்வொரு நிர்வாஹகமிட்டியின் கூட்டத்துக்கு வந்திருந்து கார்யங்களை நடத்திவந்தார். ஸம்ஸ்க்ருதவித்யையில் மிகவும் அபிமானமுள்ளவர். பண்டிதர்களை கௌரவித்து விச்வாஸமாக நடத்திவந்தார். ப்ராஹ்மண விச்வாஸத்துடன் வைதிக கார்யங்களில் மிகவும் ச்ரத்தையுடன் தன்னுடைய காலத்தைக்கழித்தார். ஸ்ரீபெரும்பூதூர் ஸம்ஸ்க்ருதபாடசாலைக்கு இவர்மிகவும் ச்ரமப்பட்டு அநேக ஸௌகர்யம் செய்துகொடுத்தார். லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் மெம்பராக இருந்து தேசத்துக்குவேண்டிய ஸௌகர்யத்துக்கும் பாடுபட்டார். இவருடைய நிர்யாணத்தால் நமதுஸபைக்கும் பெரியநஷ்டம் உண்டு பண்ணப்பட்டது. நம்முடைய ஹார்த்தமான அநுசோசனங்களை அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவிக்கிறோம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 APR 1926
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பதினைந்தாவது வார்ஷிக மஹாஸங்கம்.

விஜ்ஞாபனம்,

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபையின் பதினைந்தாவது வார்ஷிக மஹாஸங்கம் நாளது குரோதன௵ மார்கழிமீ 13உ (டிசம்பர்மீ 27) ஞாயிற்றுக்கிழமை வுப்பட்டேர் ஸ்ரீமான் ஆழ்வார் செட்டிகாரு ராமாநுஜ கூடத்தில் ஸ்ரீபகவத்க்ருபையை முன்னிட்டு பகல் **2-மணிக்கு** ஆரம்பிக்கப்படும். பொப்பிலி மஹாராஜா அவர்கள் ஸபையை உபக்ரமிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உபந்யாஸ விவரங்கள் முதலியவைகள் தினசரிப்பத்திரிகையிலும் சபை நடக்கும் காலத்தில் விளம்பர மூலமாகவும் தெரிவிக்கப்படும். பரிகணிதர்களான வித்வான்களால் வேதாந்த விஷயமான உபந்யாஸங்கள் நடைபெறும். தேவரீர் இந்த ஸங்கத்துக்கு எழுந்தருளி ஸதஸ்ஸை அலங்கரிக்க வேண்டுமென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கிறோம்.

**S. கோபாலஸாமி அய்யங்கார்,**
**ஆர். ஸ்ரீனிவாஸராகவ அய்யங்கார்,** } *காரியதரிசிகள்.*

**வி. வெ. ஸ்ரீனிவாஸ அய்யங்கார்,**
*ஸபாத்யக்ஷர்,*

186756

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

# சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 15-வது வருஷத்திய அறிக்கை.

ஸபை சென்ற வருஷத்தில் ஸபைக்கு 92 மெம்பர்கள் அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்கள். சென்ற மூன்று வருஷங்களாக ஸபை வ்ருத்தியடைந்துவருவது அடியில் குறிக்கப்பட்ட ஸங்க்யையிலிருந்து வ்யக்தமாகும்.

| மெம்பர்கள். | 13-ஞல | 14-ஞல | 15-ஞல | 16-ஞல |
|---|---|---|---|---|
| முதல் வகுப்பினர் | 58 | 82 | 70 | 75 |
| இரண்டாவது வகுப்பினர். | 285 | 401 | 588 | 676 |
| சாச்வத மெம்பர்கள். | 1 | 1 | 1 | 1 |
| ஆனரரி மெம்பர்கள். | 7 | 7 | 7 | 7 |
| | 351 | 491 | 666 | 759 |

ஸ்ரீவைஷ்ணவர்களுடைய அபிமானத்தால் தீபிகையின் ஐவேஜிலிருந்து ரூ 750 சாச்வத பண்டுக்காக ப்ரத்யேகமாய் திருவல்லிக்கேணி கோஆப்ரேடிவ்க்ரெடிட் ஸொஸைடியில் ரூ 100-க்கு 6¼-வீதம் வட்டிக்கு போடப்பட்டிருக்கிறது. இவ்வருஷம் ரூ 250 ஜாஸ்தியாக சாஸ்வதபண்டுக்கு போடப்பட்டது ஸபைக்கு பகவத்க்ருபை யிருக்கிறதென்பதை காட்டுகிறது. பகவானுடைய க்ருபையால் இது வ்ருத்தியடைய வேண்டும்.

தமிழ் ஜில்லாக்கள் பதினென்றி இருந்தும் மெம்பர்கள் 759 யென்பது மிகவும் குறைவைக்காட்டுகிறது. ஒவ்வொரு மெம்பரும் இன்னும் சிலரைச் சேர்த்துக்கொடுப்பதென்ற ஒரு அபிஸந்திகொண்டால் ஸபை எவ்வளவோ முன்னுக்குவந்துவிடும். பகவான் ஒவ்வொருவருடைய திருவுள்ளத்திலும் இதை தலைக்கட்டிக்கொடுக்கவேணுமாய் செய்வாரென்று நம்புகிறோம்.

உப. வே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமியை ப்ரார்த்தித்தும் அவரும் முதலில் ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டு பிறகு தம்முடைய அசக்தியால் முடியாது என்று ஸாதித்துவிட்டார். கூடிய சீக்கிரத்தில் இதற்கு ஏற்பாடுசெய்யப்படும். இவ்விதம் பிரபுக்கள் த்ரவ்யஸஹாயம் செய்தால் ஒவ்வொரு ஜில்லாவிலும் உபந்யாஸங்கள் செய்ய ஏற்பாடுசெய்யலாம்.

## ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்திர மஹாதேசிகன் ஸம்மானம்.

192 முதல் 1926வரை உள்ள ஸம்மானம் ரூ. 45ம் ஸ்ரீ. உப. வே. பி. ஆர். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் பண்டில் ரூ. 5ம் சேர்த்து ஸ்ரீபரமபத ஸோபானத்துக்கு வ்யாக்யானம் ஸாதித்த ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் பகவத்விஷயம் சேட்டலூர் நரஸிம்மாசார்யர் ஸ்வாமிக்கு கொடுக்கப்பட்டது. இந்த வ்யாக்யானம் நம்முடைய தீபிகையில் அச்சிடப்பட்டுவருகிறது.

---

### வரவு செலவு கணக்கு.

வரவு

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சென்ற வருஷம் கைஇருப்பு | 954 | 3 | 2 |
| தீபிகைச் சந்தா வரவு | 2060 | 5 | 0 |
| மறுபதிப்பு விற்பனை | 16 | 15 | 0 |
| அட்வர்டைஸ்மெண்டு வரவு | 24 | 0 | 0 |
| அச்சிடத்தற்கு வரவு | 60 | 12 | 0 |
| கர்ரண்டு, பிக்ஸெட்டிபாஸிட்க்கு வட்டி வரவு | 45 | 7 | 5 |
| உபந்யாஸ பண்டுக்கு | 235 | 0 | 0 |
| ஸம்பாவனை | 0 | 12 | 0 |
| சாச்வத பண்டுக்கு | 25 | 0 | 0 |
| மொத்தம் | 3422 | 0 | 7 |

செலவு

| | | | |
|---|---|---|---|
| அச்சுக்கூலி | 726 | 3 | 3 |
| காகிதம் | 571 | 3 | 5 |
| விஷயப்ரதானம் | 180 | 0 | 0 |
| போஸ்டேஜ் | 245 | 8 | 3 |



| | | | |
|---|---|---|---|
| உபந்யாஸங்களுக்கு | 185 | 5 | 6 |
| ப்ருப்பார்த்ததற்கு | 5 | 0 | 0 |
| டிராவலிங்குசெலவு | 25 | 14 | 9 |
| ஸாதல்வார் | 4 | 12 | 6 |
| அச்சாபீஸுக்கு அட்வான்ஸ் | 30 | 0 | 0 |
| ஆதிவண் சடகோபஸ்வாமி ஸம்மானம் | 50 | 0 | 0 |
| தீபிகைக்கு மேல்விலாஸம்எழுதி ஒட்டி தபாலில் போட | 55 | 0 | 0 |
| குமஸ்தா | 40 | 0 | 0 |
| ஃபைலிங்குசெலவு | 6 | 9 | 6 |
| பைண்டிங்கு | 2 | 10 | 0 |
| சில்லரைக்கூலிகள் வண்டிவாடகைகள் | 39 | 1 | 6 |
| | 2167 | 4 | 8 |
| பாக்கி ரூ.— | 1255 | 1 | 11 |

இதன் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| சாச்வதபண்டு | 750 | 0 | 0 |
| டில்லிபண்டு | 272 | 7 | 6 |
| M.R.S. பண்டு | 50 | 0 | 0 |
| வித்வத்ஸதஸ் பண்டு | 6 | 6 | 9 |
| தீபிகை பண்டு | 176 | 3 | 8 |
| | 1255 | 1 | 11 |

**கணக்கு பரிசோதனை.** சென்ற வருஷத்தின் கணக்குகளை பரிசோதிக்க ஸ்ரீ உப. வே. N. V. ஸ்ரீநிவாஸாசார்யரை கேட்டுக்கொள்ளும்படி கமிட்டியில் தீர்மானம் செய்ததின்ப்ரகாரம் அந்தஸ்வாமியை ப்ரார்த்தித்து, அவரும் கணக்குகளை பரிசோதித்து அவருடைய ரிபோர்டும் இத்துடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

S. கோபாலஸ்வாமி அய்யங்கார்,
ர. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார்,
காரியதர்சிகள்.

## ஆடிட் ரிபோர்ட்டு

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபையின் கார்யதர்சிக்கு.

ஐய்யா,

எக்ஸிக்யூடிவ் கமிடி என்னைக் கேட்டுக்கொண்டபடி நான் ஸபையின் 1924-1925 வருஷத்திய சென்ற ஸெப்டம்பர்ம்ீ முடிய ஒரு வருஷத்திய கணக்குகளை பரிசோதித்தேன். வருஷ ஆரம்பத்தில் கை இருப்பு ரூ 954-3-2 இருந்தது. வருஷமுடிவில் இருக்கும் துகை ரூ. 1255-1-11 இந்தத் துகையிலிருந்து சென்ற வருஷம் வட்டிக்குப்போடப்பட்ட ரூ. 500 உடன் சேர்த்து ரூ. 750- திருவல்லிக்கேணி கோஆபரேடிவ்க்ரெடிட் ஸொஸயிடியில் ரூ. 100-க்கு $6\frac{1}{4}$ ரூ. விதம் வட்டிக்குப் போடப்பட்டிருக்கிறது. இது ஸபை நல்ல ஸ்திதியிலிருக்கிறதுஎன்பதைக் காட்டுகிறது.

என். வி. ஸ்ரீநிவஸாசார்யர்,
ஆடிட்டர்
போஸ்டல், அக்கவுண்டாபீஸ், சென்னை.

புரசைவாக்கம்,.
30-11-25

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:


# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ ஐய்யங்கார், எம். ஏ.
கார்யதர்சி }

ஸம்புடம் 16.] குரோதனஸ்ரீ, மார்கழிமீ. [ஸஞ்சிகை 3.


" [illegible] ।
[illegible] ॥

[ஸ்ரீபாகவதம் - 1-9-28 ॥

## பத்ராதிபரின் குறிப்புகள்.

### நமது மடங்களும் ஸபையும்.

தென்னிந்தியாவில் நமது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஆசார்ய ஸ்தானத்தை வஹித்துவரும் மடங்கள் மூன்று. அவற்றில் பரகால மடம் மைஸூர் தேசத்திலிருப்புதால் அதைப்பற்றி நாம் இங்குசொல்லவில்லை. நாம் இவ்விடம் குறிப்பிடுகிறது ஸ்ரீ வானமாமலை ஸ்ரீ அஹோபில மடங்களே. இவைகளுக்கு ஏராளமான ஸொத்துகள் பெரிய அரசர்களால் கொடுக்கப்பட்டு அத்யாபி அவைகளை அநுபவித்துவருகிறார்கள். இவர்களுக்கு ஏராளமான த்ரவ்யமிருந்தும் நம்முடைய ஸபைவிஷயமாய் கொஞ்சம் த்ரவ்யஸஹாயம்செய்து இதை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது என்று சொல்லமுடியவில்லை. சென்ற மூன்றுவருஷங்களாக இந்த மடங்களில் பரமஹம்ஸபரிவ்ராஜகேத்யாதியாய் ஆஸ்தானத்தை அலங்கரித்துவரும் ஜீயர் ஸ்வாமிகளுக்கு பலதடவைகளில் இந்த ஸபையை ஆதரிக்கவேண்டியதவசியம் என்றும் த்ரவ்யஸஹாயம் செய்யவேண்டுமென்று ப்ரார்த்தனைபத்ரங்கள் அனுப்பப்பட்டன.

இவைகளுக்கு ஒவ்வொரு ஊரிலும் ஒருமடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவர்களை ஒவ்வொருவரையும் வேதாந்ததீபிகையில் 100 காபிகளை வாங்கிக்கொண்டு ஒவ்வொருமடத்திலும் ஒருகாபியை அனுப்பிவிட்டு, மீதமிருக்கும் காபிகளை வித்வான்களுக்கு சால்வையையோ வேஷ்டியையோ ஸம்பாவனைசெய்யுங்காலத்தில் சால்வையை அல்லது வேஷ்டியை கொஞ்சம் மட்டு விலையிலுள்ளதாகவாங்கிக்கொண்டு அத்துடன்சேர்த்துக் கொடுக்கும்படி வேண்டும். இவ்விதம்செய்தால் ஒருவருஷத்திய தீபிகையை இனாமாகக் கொடுக்கிறது என்னும் ஒரு நியமத்தைவைத்துக்கொண்டால் "ஆம்ராஸ்ச ஸிக்தா: பிதரஸ்ச ப்ரீணிதா பவந்தி" என்னும் ந்யாயத்தைப்போல் இருவிதத்தாலும் அனுகூலம் செய்ததாகும். ஒருவன் ஒரு மாமரத்தடியில் பித்ருதர்ப்பணம் செய்தானேயாகில் பித்ருகளுக்கு த்ருப்தியாய் விடுகிறதுடன் மாமரத்துக்கும் ஜலஸேசனத்தால் அனுகூலமாகிறதல்லவா? அதுபோல் இவர்கள் செய்யும் த்ரவ்யஸஹாயத்தால் ஸபைக்கு அனுகூலமும் புஸ்தகம் கொடுக்கப்படும் மனுஷ்யர்களுக்கு அனுகூலமாகும். மேலும் இவர்கள்செய்யும் த்ரவ்ய ஸஹாயத்தால் வ்யாஸம் எழுதும் ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனையாகக் கொடுக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டிருப்பதால் 'ஸர்வேஷாமேவ தாநாநாம் வித்யாதாநம் விஶிஷ்யதே' (எல்லாதானங்களிலும் வித்யாதானம் மிகவும் சிலாக்யம்) என்றபடி வித்யதான ப்ராப்தியும் உண்டாகும் என்று இவர்களுக்கு ப்ரார்த்தனைபத்ரங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

இந்த ப்ரார்த்தனையைப் பார்த்துவிட்டு ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள் செய்யும் கார்யங்கள் மிகவும் நல்லது என்று ஸ்ரீ முகம் ஸாதித்தாரே தவிர பலபர்யவஸாயியாக இன்னும் ஒரு ஸஹாயமும் செய்யவில்லை. எப்பொழுது பகவான் அவருடைய மனதில் தோன்றி ஸபைக்கு ஸஹாயம் செய்யும்படி செய்யப்போகிறாரோ தெரியவில்லை.

ஸ்ரீ அஹோபிலமடம் அழகிய சிங்கர்ஸ்வாமிக்கு எவ்வளவோ ப்ரார்த்தனை பத்ரங்கள் அனுப்பி இருந்தும், அவைகள் ஸ்ரீஸ்வாமியின் ஸமக்ஷம் போய்ச் சேரவில்லை என்று மடத்தின் ஸ்ரீ கார்யாதிகாரியிடமிருந்து அறிந்துகொண்டு ஒரு பார்த்தனைபத்ரம் ஸ்ரீ. உப. வே. இஞ்சிமேடு ஸ்வாமிக்கு அனுப்பி அதை ஸ்ரீஸ்வாமியிடம் வாசிக்கும்படி அனுப்பப்பட்டது. இந்த ஸ்வாமியும் அவ்விதமே செய்ததில் ஸ்ரீ அழகிய சிங்கர் ப்ரார்த்தனை பத்ரத்தை வாசித்துக்கேட்டு அதில் உத்கடப்ரவ்ருத்தி இருப்பதாகத் தெரியவில்லை என்று தன்னுடைய திருவுள்ளத்தை வெளியிட்டருளினார். மூன்றுவருஷகாலமாக இந்தஸபை முன்னுக்கு வரவேண்டுமென்று ஸார்த்தமாக உழைத்துவரும் கார்யதர்சிக்கு உத்கடப்ரவருத்தி இல்லையென்றால் உத்கடப்ரவ்ருத்தி என்னும் பதத்துக்கே அர்த்தமில்லாமல் போகவேண்டிவரும். இந்த அழகிய சிங்கர்ஸ்வாமிக்கு ஸபை இடம் அபிமானமிருந்தால் இவ்விதம் திருவாய் மலர்ந்தருளுவாரா? இந்த ஸபை செய்யும் கார்யம் இந்த ஸ்வாமியே செய்யவேண்டியிருக்க இவ்விதம் அவர் செய்தது இந்த ஸபையின்மீது ப்ரீதி இல்லாததனால் என்று வ்யக்தமாகவில்லையா?



பக்கத்தில் மற்ற மடாதிபதிகள் என்னசெய்கிறார்கள் என்று பார்ப்போம். கும்பகோணத்தில் ஸ்ரீ காஞ்சிகாம கோடிபீடத்தை அலங்கரிக்கும் ஸ்ரீசங்கராசார்யர் ஸ்வாமிகள் ஆர்யதர்மமென்று ஒரு மாதாந்த பத்திரிகையை நடத்துவதுமன்றி ப்ரதிவருஷம் நடந்துவரும் அத்வைத ஸதஸ்ஸுக்கு ஏராளமாய் த்ரவ்யஸஹாயம்செய்து நடத்திவருகிறார். இதேவிதமாக மத்வ மடத்திலிருந்து ஏராளமாக த்ரவ்யஸஹாயம் திருச்சானூரில் ப்ரதிவருஷம் நடக்கும் மத்வஸபைக்கு நடந்துவருகிறது. இவ்விதம் மற்ற மடாதிபதிகள் செய்யும்போது பதினைந்துவருஷகாலமாக ஸம்ரக்ஷிக்கப்பட்டு வரும் இந்த ஸபைமேல் இவர்கள் ஆதரவில்லாதிருப்பது மிகவும் சோசனீயமான விஷயமல்லவா?

த்ரிமதஸ்தர்களுக்குள் இப்பதினைந்து வருஷகாலமாக நம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஒருவரே இந்த தீபிகையை நடத்திவருகிறார்கள். இவ்விதமான பத்திரிகை மற்ற இரண்டு மதஸ்தர்களுக்குமில்லை என்பதே இவர்களுக்கு ஒரு பெருமையல்லவா? ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவரும் இதை நம்முடையது என்று அபிமானத்துடன் இதை முன்னுக்குக் கொண்டுவரவேண்டியது அவர்களுடைய முதன்மையான கடமையாகும். இதற்காகவே இந்த வேதாந்ததீபிகை ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவர்களிடமிருக்கவேண்டுமென்று பணக்காரர்களுக்கு சந்தா வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஐந்தும், மற்றவர்களுக்கு ரூபாய் மூன்றும் அதாவது மாதம் 1-க்கு கால்ரூபாய் வீதம் குறைத்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வளவு ஸௌகர்யம் செய்து கொடுத்தும் ஸ்ரீபகவத் ராமானுஜார்யருடைய திவ்யாஜ்ஞையை பரவச் செய்துவரும் இந்த மடாதிபதிகளே ஆதரிக்காவிட்டால், தனக்கு அவகாசமில்லையென்றும், ரிடையரானவிட்டு வாங்கிக் கொள்ளுகிறேன் என்றும், தீபிகையை வாசிக்க இன்னும் கொஞ்சம்காலம் கழித்து ஆகட்டுமென்றும், வேதாந்த விஷயங்களை அதி சீக்கிரமாக கற்றுக்கொள்ளுகிறதா போகட்டும், என்று பலவிதமான சாக்குபோக்குகளைச்சொல்லி வாங்காமல், தங்களுடைய மனோரதத்தை த்ருப்திசெய்துகொள்ளும் ஸாமான்ய ஜனங்களை எவ்விதம் நாம் குற்றம் சாட்டக்கூடும்?

பகவான் இவர்களுக்கு இந்தஸபையை ஆதரிப்பது ந்யாயம் என்று நினைக்கும்படிசெய்து ஸபையை அபிமானிக்கும்படி எப்போது செய்யப் போகிறாரோ தெரியவில்லை.

ப்ராஹ்மண அப்ராஹ்மண விஷயமாகவும், பஞ்சமர்களை உயர்த்த வேண்டும் என்று எங்கும் உத்கோஷிக்கும் இந்த ஸமயத்தில் நம்முடைய ஸ்வரூபயோக்யதையை கற்பித்து, தர்ம மார்க்கமாய் நடந்து உஜ்ஜீவிக்கும்படி செய்துவரும் நம் வேதாந்ததீபிகையை மறப்பது ந்யாயமாகுமா? இதை ஒல்வொரு ஸ்ரீ வைஷ்ணவர்களும் கவனிப்பார்களாக.

## அஷ்டகை.

மார்கழி மாஸம் முதல் நான்குமாதத்தில் க்ருஷ்ணபக்ஷத்தில் வரும் அஷ்டமிகளுக்கு அஷ்டகை என்று பெயர். ஹேமந்த சிசிர ருதுக்களில் க்ருஷ்ணபக்ஷம் ஸப்தமி, அஷ்டமி, நவமி இம்மூன்றும் அஷ்டகைகள் என்று ஸ்ரீ விஷ்ணு ஸ்ம்ருதியில் எழுதப்பட்டிருக்கிறது. இவைகளில் பார்வண ச்ராத்தத்தைச் செய்யவேண்டும். பார்வணமென்று சொன்னதால் பித்ரு பிதாமஹப்ரபிதாமஹாள் இம்மூன்று பெயர்களையும் உத்தேசித்துச் செய்யவேண்டியது. [illegible] என்று ஸ்ம்ருதி இருப்பதால் மாத்ரு பிதாமஹி ப்ரபிதாமஹி முதலான மூவர்களை உத்தேசித்துச் ச்ராத்தம் செய்யவேண்டும். பித்ருமேதஸாரத்தில் அஷ்டகையில் விச்வேதேவஸ்தானத்தில் 2-ஸ்வாமிகளையும், பித்ராதிஸ்தானத்தில் 3-ஸ்வாமிகளையும், மாத்ராதிஸ்தானத்தில் 3-ஸ்வாமிகளையும் வரித்து ஆக 8-ஸ்வாமிகளைச் சொல்லி ச்ராத்தம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தன்னுடைய பித்ருக்கள் எவ்விடத்தில் பூஜிக்கப்படுகிறார்களோ அவ்விடத்தில் தன்னுடைய மாதாமஹர்களும் பூஜிக்கப்படவேண்டும் என்கிறவசனப்படி மாதாமஹாதிகளுக்கும் மூன்று ப்ராஹ்மணர்களைச் சொல்லி ச்ராத்தம் செய்யவேண்டுமென்று சாஸ்திரம்.

மார்கழிமீ முதல் பங்குனிமீ முடிய நாலுமாஸங்களிலும் அஷ்டகா ச்ராத்தத்தைச் செய்யவேண்டும். அவ்விதம் செய்யமுடியாதவன் ஒரு மாஸத்திலாவது செய்யவேண்டும். போதாயனர் மாகபௌர்ணமிக்குமேல் க்ருஷ்ணபக்ஷத்தில் வரும் ஸப்தமி அஷ்டமி, நவமி இம்மூன்றும் அஷ்டகைகள் என்று அபிப்ராயப்பட்டிருக்கிறார். இந்த அஷ்டகா ச்ராத்தம் நித்யமானது.

அமாவாஸ்யை, வ்யதீபாதம், பவுர்ணமி, அஷ்டகை இவைகளில் தெரிந்தவன் சிராத்தம் செய்யாவிடில் ப்ராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுமென்று ஸ்மிருதி இருப்பதால் அவச்யம் அஷ்டகாச்ராத்தம் செய்யவேண்டும். இது செய்யமுடியாதவன் ஜலக்குடத்தை நல்லவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அல்லது ச்ராத்தமந்திரத்தையாவது ஜபிக்கவேண்டும்.



ஆச்வலாயன ஸ்ம்ருதியில், பணமில்லாதவன் அஷ்டகா ச்ராத்தவிதிக்காக மாசிமாதத்தில் மிகுந்தபக்தி பூர்வகமாய் தர்ப்பணம் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எவர்கள் அஷ்டமியிலும் நவமியிலும் பரிசுத்தமான மனஸுடன் அஷ்டகையைச் செய்யவில்லையோ அவர்கள் ஜன்ம ஜன்மத்திலும் தரித்திரர்களாயும் அவலக்ஷணமுள்ளவர்களாகவு மாகிறார்கள்.

ஆகையால் அஷ்டகையில் தர்ப்பணம் செய்யவேண்டிய தவச்யம்.

# புஸ்தகவிமர்சம்

**ஸ்ரீபாஷ்யம் ச்ருதப்ரகாசிகா ஸஹிதம்.**

ப்ருஹ்ம ஸூத்ரத்திற்கு ச்ருதப்ரகாசிகாஸஹிதம் திருச்சிறுப்பள்ளி ஸெயிண்டு ஜோஸெப் காலேஜில் ஸம்ஸ்க்ருத பண்டிதராயிருக்கும் ஸ்ரீ. உப, வே. ஸாரஸ்வத ஸாரஜ்ஞரான, கவிசிகாமணி, தட்டை. ஸ்ரீநிவாஸாசார்யரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுவருகிறது. இதை ஸ்ரீரங்கம் தமிழ் மொழிபெயர்ப்பு ஸங்கத்தார் கும்பகோணத்தில் அச்சிட்டு வெளியிட்டு வருகிறார்கள். இதில் நான்காவது ஸம்புடம் கொஞ்சநாள்முன் வெளிவந்திருக்கிறது. இதில் மஹாஸித்தாந்தத்தில் "[illegible]" அதாவது வேதம் பொய்என்றால் வேதத்தால் ப்ரதிபாதிக்கப்படும் ப்ருஹமும் பொய்என்று முடியும் என்று உபபாதிக்கப்படும்வரை தர்ஜமாக்கப்பட்டிருக்கிறது. மிகவும் கஷ்டமான இந்தபாகத்தை தமிழில் மொழிபெயர்த்து உபகரித்துவரும் ஸ்ரீ. தட்டை வித்வானுக்கு ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹமும் இன்னும் இத்தால் உபகரிக்கப்படுபவர்களும் மிகவும் க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருக்கவேண்டியதவச்யம். இத்தால் தமிழ் மொழிபெயர்ப்புச் சங்கத்தார்செய்யும் உபகாரம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிமுடியாது. இந்த கைங்கர்யத்தை எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் அபிமானித்து மேல்மேலும் உத்ஸாஹத்துடன் கூடி இதைத் தலைக்கட்டிவைக்கும்படி எல்லோரும் இதைவாங்கி ஸஹாயம்செய்வார்களென்று நம்புகிறோம்.

# ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்.

(ஸ்ரீ. உப. வே. ஸுந்தர ராகவாசார்யர்.)

ஸ்ரீமதஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீதேசிகன் திருமாளிகையை ஒட்டி ஓர் தோப்பு இருக்கிறது. இது ஸ்வாமியின் விபவாவதாரதசையிலிருந்தே திருமாளிகையைச் சேர்ந்ததென்றே தோன்றுகிறது. ஏனென்றால் திரு

மாளிகைக்கு வடக்கில் வடக்கத்தியார் சிலகோசாயிகள் வெகுநாளாக தங்கள் மடம் ஒன்றில் வசித்துவருகிறார்கள். அவர்கள் மடத்து உள் சுவரில் ஓர் சித்திரம் இருக்கிறது. அதில் முன்னிருந்த ஓர் கோசாயி விநீதராய் ஸ்வாமி ஸ்ரீதேசிகனிடமிருந்து அர்த்தக்ரஹணம் செய்வதாக எழுதப்பட்டிருக்கிறது. நன்றிபாராட்டிய அந்த கோசாயி ஸ்வாமிக்கு நீராட்டம்முதலிய கர்மாக்களுக்கு கருடநதிக்கு அபாதிதமாய் எழுந்தருளும்படி அப்பெரியதோப்பை ஸமர்ப்பித்ததாக அந்த மடத்தில் உள்ளவரும் மற்றவரும் சொல்லுகிறார்கள்.

இதுவும் ஸ்ரீதேசிகன் க்ருபை எங்கும்பரவினதற்கு ஓர் நிதர்சநம்.

## கடிதம்.

(சொக்காணூர் - ஸ்ரீ. உப. வே. பார்த்தசாரதி அய்யங்கார்.)

**வேதாந்ததீபிகை பத்திராதிபருக்கு:—**

சென்ற புறட்டாசிமீ கடைசியில் அதாவது ஐப்பசிமீ முதல்தேதி துலாஸங்கிரமணத்தன்று வந்த அமாவாஸ்யை விஷயத்தில் இவ்விடங்களில் சிலர் [illegible] என்றும் க்ரந்தத்தில் இரண்டும் அநுஷ்டிக்கும்படி நிர்ணயித்திருக்கிறார்களென்று இரண்டு தர்ப்பணம் செய்தார்கள். பகுவாக ஸ்மார்த்த ஸம்ப்ரதாயஸ்தர்களில் நல்ல ஜ்ஞாதாக்களான வைதிகர்களுள்பட ஸங்கிரமண சிரார்த்தம் மட்டில் செய்தார்கள். வேதாந்த தீபிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அக்டோபர் மாத பஞ்சாங்கம் என்னும் தலைப்பில் அக்டோபர்மீ 17வ ஐப்பசிமீ 1வ அமாவாஸ்யை, மாதப்பிறப்பு தர்ப்பணம் உதயத்தில் செய்யவேணும், அமாவாஸ்யை தர்ப்பணம் செய்யக்கூடாதென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி இவ்வருஷம் இன்னும் சில அமாவாஸ்யை வருகிறபடியால் அது விஷயமாக நிச்சயம் தெரியவேண்டியிருப்பதால் வித்வத்ஸதஸ்ஸில் இதன் மூலமாக விஜ்ஞாபனம் செய்துகொள்ளுகிறேன்.

இதன் கீழ் ஸ்ம்ருதிவிலோசனத்திலிருக்கும் இந்த விஷயமான வாக்யங்களையும் அதற்கு அடியேனுக்குத்தோன்றிய அர்த்தங்களையும் இதற்கு எதிரிடையாகச் சொல்லுமவர்களின் அர்த்தங்களையும் எழுதியிருக்கிறேன். இந்த விஷயத்தில் ஜ்ஞாதாக்களான மஹான்கள் இந்த க்ரந்தத்தின் தாத்பர்யத்தையும் இதர க்ரந்தங்களுடன் ஐககண்டயப்படுத்தி ஒரு நிர்ணயம் தீபிகாமூலம் அனுக்கிரகிக்கப் பிரார்த்திக்கிறேன். ‘[illegible]



[illegible]’ ஒருவன் ஒரு தினத்தில் ஒரு உத்தேச்யமான இரண்டு ச்ராத்தங்கள் செய்யக்கடவனல்லன், தேவதை ஒன்றாயிருப்பதால். இதற்கு ஆதாரமான வசனங்கள், ‘[illegible] ॥ ஜாபாலி:, [illegible] ॥ இந்த வசனங்களை எழுதி மேலும் இந்த வசனங்களால் நிஷேதிக்கப்பட்டதற்கு விஷயங்களை காட்டுகிறார். ‘[illegible]’ இதினர்த்தம்: பிரதிதினமும் பிதரு தேவதைகளின் நிமித்தமாக பஞ்சமகாயஜ்ஞத்தில் ஒரு பிராமணனையாவது ஸாப்பிடும்படி செய்யவேண்டும் என்னும் வசனப்படி செய்யப்படுகிற நித்யச்ராத்தத்துடன், அமாவாஸைசேர்ந்தாலும், ஸோதகும்பத்துடன் மாஸிகம் சேரும்தினத்திலும், அமாவாஸ்யையுடன், மந்வாதி, யுகாதி, கிரஹண, ஸங்கிரமண, சிராத்தம் சேர்ந்தாலும், நித்யமான முந்தினதைக்காட்டிலும் அநியதமான, உத்தர கர்மானுஷ்டானத்தால் பூர்வானுஷ்டானம் ஸித்திக்கிறது. அதாவது, நித்திய சிராத்தம் பிரதிதினமும் செய்யவேண்டியதாகையால் அதைக்காட்டிலும், மாசத்தில் ஒருதடவை செய்கிற தர்ச சிராத்தம் அநியதம். பிரதிதினமும் செய்யவேண்டிய ஸோதகும்ப சிராத்தத்தைக்காட்டிலும் மாஸந்தோறும் மிருததிதியில்செய்கிற மாஸிகசிராத்தம் அநியதம். மாஸந்தோறும் நியதமான அமாவாஸ்யையைக்காட்டிலும் ஒவ்வொருதடவை ஸம்பவிக்கிற மந்வாதி, யுகாதி, கிரஹண, ஸங்கிராந்திகாலங்கள் அநியதம் ஆகையால் இதுகள் சேருகிற காலங்களில் பிரதிஸ்தலங்களிலும், அநியதமான உத்திரசாஸ்திரானுஷ்டானத்தால், பூர்வசாஸ்திரானுஷ்டானம் ஸித்திக்கிறது. இந்தவிஷயத்தில் நியதமில்லாததுதான் பூர்வானுஷ்டானத்துக்குக் காரணம். [illegible]

186756.
R[illegible] NUD
NRS·16·3

[illegible] ॥ இதின் தாத்பரியப்படிக்கும், தேவதாபேதம் ஏற்பட்டால் சிராத்த த்வயம் அனுஷ்டிக்கவேண்டுமென்று ஏற்படுகிறதே தவிர, இரண்டுவர்க்க உத்தேச்யமான அமாவாஸ்யை, ஸங்கிரமணம் ஒரு நாளில் இரணடும்செய்ய இடமில்லையென்று தோன்றுகிறது. இரண்டும் செய்யவேண்டுமென்று சொல்பவர்கள், ப்ரத்யாப்திகம் முதலானதினங்களில் அமாவாஸ்யை, அல்லது ஸங்கிரமணம் வந்தால் எப்படி இரண்டும் செய்கிறோமோ அப்படித்தான் இந்தவிஷயத்திலும் அமாவாஸ்யை, ஸங்கிரமணம் இரண்டு சிராத்தமும் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். அதாவது அமாவாஸ்யை, அல்லது சங்கிரமணம், ஆப்திகம் இவைகளில் தேவதாபேதமில்லை என்றும் ஆகையால் அதைப்போலவே என்றும் சொல்கிறார்கள். அடியேனுக்கும் ஆப்திகாதிகள் ஒரேவர்க்கமானதாலும், தர்சாதிகள் வர்க்கத்வயமானதாலும் தேவதாபேதம் வருமென்றும், அந்தவிஷயத்தில் சிராத்த த்வயானுஷ்டானம் அவசியமென்றும், தர்ச ஸங்கிரமணவிஷயத்தில், இரண்டும் வர்கத்வய உத்தேச்யமானதால் இரண்டும் தேவதாபேதமுள்ளவைகளல்லவென்றும் ஆகையால் ஒன்றுதான் அனுஷ்டிக்கவேண்டுமென்று தோன்றுகிறது. ஆகையால் நமது ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த நிஷ்டர்களான ஆஸ்திகவித்வச்சிரோமணிகளான பாகவதர்கள் இந்தவிஷயங்களை நன்றாக கிரந்த பரிசீலனைசெய்து அகிஞ்சனனாகியும் மந்த ப்ரஜ்ஞனாகவிருக்கும் அடியேனுக்கு ஸந்தேகம்தீரும்படிக்கும், எல்லாருக்கும் ஒரேவிதமான அனுஷ்டானம் செய்யவேண்டிய நிமித்தமும் நிச்சயமான நிர்ணயம், அனுக்கிரஹிக்கும்படிக்கு விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

## ஒரு வேண்டுகோள்.

ஜ்ஞானபூரண ஸ்ரீமத் சடகோப பரமாசார்ய மதஸ்தாபன ப்ரவர்த்தகராகிய ஸ்ரீமத் ராமாநுஜர் திருவடியே தஞ்சமென்று போதருஉம் புகழ்சால் பரம வைதிகாஸ்திக வுத்தமப் பெரியோர்களுக்கோரரிய விஜ்ஞாபனம்:—

வைணவாபிமானம் மிகத்துலங்கிப் பிரகாசித்துன்னத நிலைக்கண் பாவுமென்பதாகவோ, அதனால் வைணவமதவிருத்தி உயர்ந்துவிடுமென்பதாகவோ, முன்னுக்குப்பின் முரண்படத்தக்க பல சில வாபாச கதைகள், ஆழ்வாராசாரியர் சரித்திரங்களைக்கூறும் குருபரம்பரா பிரபாவமுதலிய சில ஸ்ரீகோசங்களில், இடைச்சொருகலாய்ச் சேர்த்தெழுதப்பட்டிருக்கின்றன. தற்கால ஐரோப்பா அமெரிக்கா தேயங்களது புலமையாளர்களால் எழுதப்பட்டுவரும் தத்துவ நிருணயங்களை யோதுகின்ற நம்நாட்டு ஆஸ்திக கனவான்களால் அவை முற்றிலும் வெறுக்கப்படுகின்றனவன்றியில், அதை தம்



மைக்கண்ணுறாஉம் ஏனைய மதவாதிகளால் மிக எளிதாகக் கண்டிக்கப்பட்டும் வருகின்றன. உதாரணமாக, குருபரம்பரைகளில் எழுதப்பட்டிருக்கின்ற கால நிருணயங்களும் மற்றுஞ் சில கதைகளும் பொய்வாய்ப்பட்டனவென்றே ஸ்ரீமத் S. Krishnasami Ayyangar அவர்கள், தமது "Early Histroy of Vaishnavism" என்ற நூற்கண்ணும், எமக்கியற்றமிழ்நுட்பங்களை அறிவித்துவந்த சுவாமி வேதாசலம் அவர்கள், தமது 'மாணிக்கவாசகர் வரலாறுங்காலமும்' என்ற நூலகத்தும் கூறுகின்றார்கள். இன்னும்பல.

நமது தர்சனத்தின் உண்மை இதுவா என்று தலைக்கண்டறியமாட்டாத ஏனையோரும், இவற்றின்பால் அருசிகொண்டவராய் எமக்குக் கடிதங்கள் பலவெழுதியிருக்கின்றனர். இம்மட்டோ, நம்மாழ்வார், மாணிக்கவாசகர் என்பாருக்குப் பிற்பட்டவரென்றும் பின்னவரிடமிருந்தே அவர், பொருணுட்பங்களைத் திருடித் தமது நூற்களில் நிரப்பிக் கொண்டார் என்றும், இறைவன், அரியோ, அயனோ, அரனோ, மற்று யாவனோ, என்றையப்பாடுற் றுண்மை யறியாதிம் மூவர்க்கிடையில் நிச்சயபுத்தியின்றித் தடுமாறினார் என்றும் எமக்குக் கடிதங்கள்வந்தன.

அடியேம் 1924ம் ஆண்டே, "சடகோபாழ்வார் வரலாறுங் காலமும்" என்ற நூலை, தற்காலத் தத்துவத்திற்கிணங்கவும், முற்காலத்தார் மெய்யகத்தீடுபடவும், சடகோபாழ்வார் அரியவாக்குகள் இன்ன இன்ன ஏதுப்படி இவ்வாறிவ்வா றருளப்பட்டிருக்கின்றனவென் றெடுத்துக்காட்டவும், அவரது காலம் சைவசமயகுரவர்களுக்கெல்லாம் முந்தியதென்று ப்ரமாணவாயிலாக நிலைநிறுத்தி காட்டவும், பெரியோ ராணைக்கொண்டெழுதுவதற்குக் கோலினேம். வினைவயத்தால் எம்மையகன்றிறைவன் திருவடிநீழலை 2-6-25-ல் அடைந்த வெமதருமை மனைவியின் பிரிவாற்றாத் துயரத்தோ டிருந்துவிட்டேமாதலின் இனி யதனைச்செம்மை படுத்தி வெளியிடக்கருதியிருக்கின்றோம். ஆங்கில மொழியினும் கட்டுரையளவாய் அதனை யெழுதவிருக்கின்றோம்.

இருகலைநுட்பங்களில் மிகுவல்லுனராய் அதிமதிபெற்றொழுகும் பெரியோர்களால் எழுதப்படவேண்டிய இத்துணை நுண்ணிய சீரிய ஆராய்ச்சி ஏதுமறியாவேழையேமாற் செய்யப்படமாட்டாதெனினும், குருவாணையும் அருளும் ஒருங்குபெற்றிதனை யெழுத வொருப்பட்டிருக்கின்றோம்.

ஆதலாலே, மிக்க நுண்ணறிவுடைய ஆஸ்திகப் பெரியோர்காள்! இவ்வாராய்ச்சிக்கு வேண்டும் உதவி மிகப்பலவாயிருப்பதால், நம்மாழ்வார் காலத்தைப்பற்றிய உண்மைவழக்காறுகளோ, அல்லது எதிருரைமறுப்புக்கோ, நூலளவானுங் கேள்வியளவானும் அறிந்தவரைக்கும், அவை தம்மையும், இவ்வாராய்ச்சியைப் பொருத்த விதரமுட்டு விஷயங்கள் இருந்தால் அவை தம்மையும், நமதரிய தீபிகைவாயிலாவது அல்லது வேறே எமக்காவது எழுதி யெம்மை உற்சாகப்படுத்தினாற் பேருதவியாயிருக்கும். அன்னோர்கட்கு யாம் எழுமையுங் கடமைப்பட்டிருக்கின்றோம். நூலும் இடையூறின்றி இனிது முடிவுபெறும்.

பாகவதோத்தமர்களாகிய எமது பிரிய நண்பர்களுக்கு ஒருக்கால் இதன்பொருட்டுச் செலவுநேருமாயின், அதனை யாமேற்றுக்கொள்ளுகின்றோம்.

பரிசுத்த பக்திநிலைகழக ஆசிரியர்,
மாறன்—மந்திரம்.
கள்ளக்குறிச்சி.

இங்ஙனம்,
ஸ்ரீவைணவர்த்தொண்டன்,
இராமகிருஷ்ண சடகோபதாசன்.

ஸ்ரீ:

# ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம்.

(ஸ்ரீ. உப. வே. தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.)

(முன்தொடர்ச்சி).

ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே ।
ஆஜ்ஞாச்சேதீ மமத்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ: ॥

என்கிற பகவத் வசனத்தின்படி அவனுடைய ஆஜ்ஞாரூபமான வேதத்தால் விதிக்கப்பட்டிருக்கிற விதி நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டும் காலக்கிரமத்தால் அத்தியயனமில்லாமல் உத்ஸன்னமான வேதசாகைகளின் அர்த்தத்தை யோகதசையில் ஸாக்ஷாத்கரித்து மஹரிஷிகளால் எழுதப்பட்டுள்ள மன்வாதிஸ்ம்ருதிகளால் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற தர்மங்களை ஆஸ்திகதா புத்தியுடன் அநுஷ்டித்தும் பகவதபசார பாகவதாபசாரங்களுக்கு அஞ்சி சாஸ்த்ரீய பத்ததியில் வழுவாமலிருத்தல் ப்ரதான வைஷ்ணவ லக்ஷணமாகும். சர்வசேஷியான பரமாத்மாவுக்கு தன்னுடைய சாஸ்த்ராவிருத்தமான கர்மாசரணத்தால் முகோல்லாஸத்தை உண்டுபண்ணி பரமாத்மாவுக்கு ஸந்தோஷரூபமான அதிசயத்தை உண்டாக்குவதே சேஷபூதனை இவனுக்குத் தகுந்ததாகும்.

‘மத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகா மம ।
தஸ்மாந்மத்பக்த பக்தாஸ்து பூஜநீயா விசேஷத: ॥’

என்கிற ஸர்வநியந்தாவான பரமபுருஷனுடைய சாஸனத்துக்குத் தலைவணங்கி பகவதாராதனத்தைவிட பாகவதாராதனத்தில் அதிகமான அன்புடன் ப்ரவ்ருத்தித்தலும் முக்யமான ஸ்ரீவைஷ்ணவ சிஹ்னம் - இவ்வளவு உத்தம குணமுள்ளவர்களிடம் ‟ஶமோ தமஸ் தப: ஶௌசம் க்ஷாந்திரார்ஜவமேவ ச । ஜ்ஞாநம் விஜ்ஞாநமாஸ்திக்யம் ப்ரஹ்மகர்ம ஸ்வபாவஜம் ॥’ என்று ஸ்ரீகீதாசார்யனால் அருளிச்செய்யப்பட்டுள்ளதும் ப்ராஹ்மணர்களுக்கு ஸ்வபாவ ஸித்தமாகவுமிருக்கிற பாஹ்யேந்திரிய நியமனம், அந்தக்கரண நியமனம், போகநியமரூபமாகவும் சாஸ்தர ஸித்தமாகவுமிருக்கிற காயக்லேசம், சாஸ்திரீயகர்மாநுஷ்டாநயோக்யதை, பிறரால் துன்பம் நேர்ந்தபோதிலுங்கூட நிர்விகாரமான மனதுடன்கூடி இருத்தல், மனதுக்கு அநுகுணமான பாஹ்யசேஷ்டையை பிரகாசிப்பித்தல், பாராவரதத்வ யாதாத்ம்ய ஜ்ஞாநம், பரதத்வ கதமான அஸாதாரண விசேஷ விஷயமான ஜ்ஞாநம், வைதிகார்த்தம் முற்றிலும் ஸத்யமென்கிற நிச்சயபுத்தி, இவைக



ளனைத்தும் கைமுதிக ந்யாயத்தால் நிலைபெற்றிருக்கும். ஆசாரத்தாலும் அநுஷ்டானத்தாலும் நடை உடை பாவனைகளாலும் சுத்தமுடையவர்களான நம் ஸ்ரீவைஷ்ணவர்களிடம் பாஹ்ய சேஷ்டையை அநுஸரித்ததாக ஆந்தர வ்ருத்தி இல்லாததுபற்றி ஆங்காங்கு கலி கோலாஹல க்ரீடை புறசமயத்தாருக்கு இன்பம்தருகிறது.

‘உபவேஷ்யகம் வசவேஷ்யகம் கஜபுண்யகஜபுஷ்டாதநம் ।
உநவ்யக்தம் அவவ்யக்தம் கஉபுண்யநவ்ருஷ்டாதநம் ॥
காவ்யஶாஸ்த்ர விநோதேந காலோ கச்சதி தீமதாம் ।
வ்யஸநேந து மூர்க்காணாம் நித்ரயா கலஹேந வா ।’

இந்த ச்லோகார்த்தங்களை சற்று மனதில்வாங்கி ‘ஹம்ஸோ ஹி க்ஷீரமாதத்தே தந்மிஶ்ரா வர்ஜயத்யப:’ என்கிறவசனத்தின்படி ஸாராஸாரவிவேசனம்பண்ணி அஸாரங்களை நீக்கி ஸாராம்சத்தை அன்னப்பாவைபோல் க்ரஹித்தால் இந்த ஸ்ரீவைஷ்ணவர்களும் சுத்த ஹம்ஸஸ்வரூபிகளே. இவ்வாறு எல்விதத்தாலும் மேன்மை பெற்றிருக்கிற ஸ்ரீ வைஷ்ணவர்களிடத்தில் ஏதோசில தோஷங்களிருந்தாலும். ‘ஏகோ ஹி தோஷோ குண ஸந்நிபாதே நிமஜ்ஜதீந்தோ: கிரணேஷ்விவாங்க:’ என்கிற வண்ணம் ஒழிந்தேபோம். இவைகளுக்குள் முக்கியமாக வர்ஜிக்கத்தக்கது ஒன்று இடைவிடாமல் இவர்களை அனுஸரிக்கிறது. அது இவர்களுடைய குற்றமல்ல. ப்ரக்ருதிஸம்பந்தப்ரயுக்த மென்பதினால் நாம் மனத்தேறுதலை அடைவோமாக. இதைமனதில் கருதியே, ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன், ‘ஆவர்ஜ்ய பத்ம நவாயதி தமஃபௌஷ்டி ஞாநாஸ்ய உத்யதவநா தவிலக்ஷ ஹோதோ: । ஆவார்த ஶாந்தி மதநாது பராவஸீய நதோக்ரது மௌசநரீ விஜஹா ஸுவஸுர்ய’ என்கிற இந்தச்லோகத்தால் ‘தன் மனக்குறையை வெளியிட்டார். நம்ம ஸித்தாந்தம் சர்வோத்தமம். அத்தியாத்ம சாஸ்திரப்ரவர்த்தகர்களான ஆசார்யர்களோ அவாங்மனஸகோசரமான திவ்விய சக்தியுடையவர்கள். மதப்ரக்ரியையோ பருகப்பருக ருசிகரமாயுள்ளது. கூடயுக்திகளால் இசைக்கப்பட்டு அனுபவத்திற்கு ஸரிவராத துர்மதங்கள்போல் மனதுக்கு அருசிகரமான மதமல்ல. எவ்வண்ணம் சாஸ்திரப்ரக்ரியையோ அவ்வண்ணமே அநுஷ்டானம். நம்மஸித்தாந்தத்தின் பெருமையைப்பற்றிப் புகழாத அன்யமதஸ்தர்களில்லை. இந்த மதரஹஸ்யங்களை நன்கு கற்றுணர்ந்து அனுபவத்துக்குக் கொண்டுவந்தவர்களுக்கு அஸாரமானகூட யுக்தி கடிதங்களான துர்மதங்கள் முன் முன்

காட்டி நிர்கச் சக்தியுள்ளதாக ஆகா. இந்த விஷயத்தைக் கருதியே ஸ்ரீநிகமாந்தமகாதேசிகன். '[illegible] ॥' என்று அனுக்ரஹித்தார்.

'[illegible] ।
[illegible] ॥'

என்கிறவண்ணமாக எவ்வளவு குணநிதியாக இருந்தபோதிலும் ஒருகுடம் பாலுக்கு ஒருவிஷபிந்துபோல் மற்ற நற்குணங்களனைத்தையும் கெடுக்கிற அஸூயை என்கிற ஒருகொடிய துர்குணத்தை இழப்பது ஸ்ரீவைஷ்ணவாளுக்கு அஸாதாரண லக்ஷணமாகும். ஆஸ்திக்யம் பொறுமை பகவத்பாகவதபக்தி, ஆர்ஜவம், ஸந்தோஷம், அநஸூயை சமதமாதிகுணங்கள், பூததயை, எங்கும், ஸமத்வபுத்தி பாகவதாபசாரபீதி, விஷ்ணுவினிடத்தில் நிரந்தரமான ப்ரீதிரூபமான தியானம், தேவதாந்தராஸ்பர்சம், ஸர்வசேஷியான ஸ்ரீய:பதியே ரக்ஷகன் என்கிற திருடமான நிச்சயம், ஆசார்யனிடம் தேவதாபுத்தி, வர்ணாச்ரம தர்மானுஷ்டானத்தில் சிரத்தை, கர்த்ருத்வ மமதாபலத்யாக பூர்வகமான கர்மானுஷ்டானம், சாஸ்திரார்த்த விச்வாஸம் ஸாத்விகஸேவை, நிரந்தரமாக பகவத்குணாநுபவம் பாகவத ப்ராவண்யம், இவை அனைத்தும் சேர்ந்திருத்தலே ஸ்ரீவைஷ்ணவாஸாதாரணலக்ஷணம்-விரித்து உரைத்தால் வாசிப்பவர்களுக்கு வைரஸ்யமுண்டாகுமென்று எண்ணி இத்துடன் இந்த உபந்யாஸத்தை முடிவுபெறச் செய்கிறேன்.

ஸ்ரீ:.

# உபநயநம்.

(ஸ்ரீ. உப. காடந்தேத்தி-கோபாலாசார்யர்.)

(முன்தொடர்ச்சி).

சிற்சில விடங்களில் காணப்படும் வேதாத்யயந ப்ரசாரமாகிற தர்மம் நாட்டுக்கோட்டைச்செட்டிமார்களின் தர்மமாகிவிட்டது. வேதத்தைவிட மேலான சாஸ்திரம் இல்லையென்று வ்யாஸர் சபதபூர்வமாக உத்கோஷிக்க அதை அநாதரிக்கலாகுமோ. வைதிகர்களிலேயே சிலர் வேதாத்தியயநம்செய்தவர்களைப்பார்த்து அநாதரம் செய்து வருவதையும் பார்க்கலாம். இன்னும்



சிலர் அர்த்தஜ்ஞாநமில்லாமல்போனால் என்னபயன் என்று வேதாத்தியயநத்தில் ருசியைக்குறைத்து விடுகிறார்கள். எந்த பிராம்மணன் வேதங்களை ஓதாமல் வேறுசாஸ்திரங்களில் ச்ரமத்தைச் செய்வனோ அவன் உயிருடனிருக்கும்பொழுதே தான் ஸந்ததியுடன் சூத்திரத்தன்மையை அடைகிறான் என்றிவை முதலிய ப்ரமாணங்களினால் பிராம்மணர்களுக்கு அத்தியயநம் முக்கிய தர்மமாகச் சொல்லியிருக்கிறது. அத்தியயந மென்பது நியமத்துடன் வேதமென்கிற அக்ஷரங்களின் ராசியைக் கிரஹிப்பது. வேதமோதவேண்டும் என்கிறவிதி அர்த்தஜ்ஞானம்வரையில் முடிவுபெறுகிறதா அல்லது அக்ஷராதிகளின் கிரஹணத்தில் மட்டும் முடிவு பெறுகிறதாவென்று சங்கித்து அக்ஷரராசி க்ரஹணத்திலேயே முடிவுபெறுகிறது என்று ஸித்தாந்தம் பண்ணப்பட்டிருக்கிறது. விஷத்தைப் போக்கடிக்கக்கூடிய வைநதேய மந்த்ரம் முதலானதுகள் அர்த்தஜ்ஞான மில்லாமலிருப்பினும் உச்சாரணத்தாலும் காம்யஸித்தியை செய்விக்கிறதாகையால் அத்யயந மாத்திரத்துக்கும் உபயோகமுண்டு. '[illegible] ॥ என்றிவை முதலிய விடங்களில் எவன் வேதமோதி அர்த்தஜ்ஞான மில்லாமலிருப்பானோ அவன் சுமையைத் தாங்குகிற தூண்போலாவன் என்றும், வேதபாரங்களாகிய பாரங்களை வகிக்கும் குங்குமஞ்சுமந்தகழுதை என்றும் அர்த்தஜ்ஞான மில்லாதவனுக்கு நிந்தை சொல்லியிருப்பதற்கு அத்தியயனத்தை நிந்திப்பதில் கருத்தில்லை. அத்யயநம் பண்ணி அர்த்தஜ்ஞான மில்லாதவனை நிந்திப்பதில் தாத்பர்யம் வேதாத்தியயநமே உபயோகமில்லை யென்றால், அதீத்யவேதம் என்று சொல்லவேண்டாம். "[illegible] ॥ என்று வேதாக்ஷர படனத்துக்கே பகவந்நாமபாராயணங்களுக்கு ஸமானபலம் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி அத்யயநம் செய்வது விதிபலப்ராப்தமாயிருக்க அத்யயநம் செய்யவேண்டிய இளமைப்பருவத்தில் பாஷாந்தரத்தை விடாமல் ஓதுகிறார்கள். பால்யத்திலேயே நம் சிறுவர்கள் விதேசியத்தவர்கள் வசத்தில் ஒப்புவிக்கப்படுவதால் விதேசியக் கல்வியின் பயனாக நம்மதங்களிலும் ஆசாரங்களிலும் அத்தியயநத்திலும் ருசிகுறைந்து நாஸ்திகர்களாய் விடுகிறார்கள். இதை உத்தேசித்துத்தான் உபநயந மானவுடன் குருகுலவாஸம்செய்து வேதம் இடைவிடாமல் ஓதவேணுமென்று மஹர்ஷிகள் நிர்பந்தித்தார்கள். நல்லொழுக்கம் முதலிய எல்லாவற்றுக்கும் ஸஹவாஸமே காரணமாதலால் குருகுல வாஸம்செய்துவந்தால் நாளடைவில் குருவினால்

உபதேசம்பெற்று அதன் மூலமாக நம்முடைய மதாசாரங்களில் விச்வாஸம் பக்தி இவைகள் உண்டாகுமாகையாலும் எட்டாவது வர்ஷத்துக்கு முந்தி சாஸ்த்ராந்தரங்களில் பரிச்ரமத்துக்கு அவகாச மில்லாமையாலும் இப்படி நிர்பந்த மேற்படுத்தினார்கள்.

### உபநயநத்தை அடைந்த ப்ருஹ்மசாரிகள் அனுஷ்டிக்கும் தர்மம்.

**அஜிநம்:—**

த்ரைவர்ணிகர்களான மூன்று ப்ரஹ்மசாரிகளும் கருப்புமானின் அஜிநத்தையும், ருரு என்கிற மான்தோலையும், ஆட்டின் தோலையும், உத்தரீயமாகவும் சணமயமான வஸ்த்ரம் வெண்பட்டு ஆட்டுரோமத்தால் செய்யப்பட்ட கம்பளம் ஆகிற இவைகளை இடுப்பில் தரித்துக்கொள்ளும் வஸ்த்ரங்களாகவும் முறையே தரித்துக்கொள்ளவேண்டும்.

**மௌஞ்ஜீ:—**

இங்கனம் முஞ்சமென்கிற மேகலைத் தர்ப்பத்தாலாகிய மௌஞ்சீ நாண் கயிறு சணக்கயிறுஆகிய இவைகள்முறையே இடுப்பில் தரிக்கத்தக்கவையாகும்.

**யஜ்ஞோபவீதம்:—**

பிராம்மணன் பருத்தியினால்செய்யப்பட்டதும் முப்புரியேற்றினதும் ஒன்பது தந்துவுடன்கூடின ப்ருஹ்மஸூத்ரத்தை யஜ்ஞோபவீதமாக அணிந்துகொள்ளவேண்டும். அரசன், சணஸூத்ரத்தாலாகிய யஜ்ஞோபவீதத்தையும், வைச்யவன் ஆட்டுரோமத்தால் செய்யப்பட்ட யஜ்ஞோபவீதத்தையும் தரிக்கவேண்டும்.

**தண்டம்:—**

இப்படியே ப்ராஹ்மணன் க்ஷத்ரியன் வைச்யன் ஆகிய இவர்கள்முறையே பலாசம் அச்வத்தம் அத்தி இவைகளை தண்டமாகக்கொள்ளவேண்டும். இம்மூவர்களுக்கு முறையே தண்டங்கள் நெற்றியளவாகவும், நெத்தி பர்யந்தமாகவும், மூக்குவரையிலுமாகவும், செய்யவேண்டியவைகள். அந்த தண்டங்கள் கோணலில்லாதவைகளாயும் புழுமுதலியவைகளில்லாததாகவும் நுனியில் யூபம்போன்ற முகத்துடன் கூடியவைகளாகவும் பட்டைகளோடு கூடினதாகவும் இருக்கவேண்டும். யஜ்ஞியோவா ஸர்வேஷாம் என்று கௌதமர் சொல்லியிருப்பதினால் யஜ்ஞத்திற்குரிய வ்ருக்ஷங்களையாவது கீழ்சொன்ன தண்டங்களாக தரித்துக்கொள்ளலாம். இந்த தண்



டங்களைப் பரித்து ஸூர்யனுக்கு அபிமுகமாயிருந்து ஸந்த்யாவந்தநம் முதலிய கார்யங்களைச் செய்யவேணும்.

ஸந்த்யாஹீநோऽஶுசிர் நித்யமநர்ஹ: ஸர்வகர்மஸு । யதந்யத் குருதே கர்ம ந தஸ்ய பலமாப்நுயாத் ॥ எவன் ஸந்த்யாவந்தநமில்லாதவனோ அவன் எல்லாகர்மங்களுக்கும் அநர்ஹன். எந்தக்கர்மங்களும் பயன்படா என்றிருப்பதால் அவசியம் ஸந்த்யாவந்தனத்தை அனுஷ்டிக்கவேணும். கீழ் ஸந்த்யை அநுஷ்டிக்கும்போது ஸூர்யாதர்சநம்வரையில் நின்றுகொண்டு அநுஷ்டிக்கவேணும். ஸாயம்ஸந்த்யையை உட்கார்ந்துகொண்டு நக்ஷத்ரம் தெரிகிறவரையில் அநுஷ்டிக்கவேண்டும். எவன் ஸூர்யன் உதிக்கையிலும் அஸ்தமிக்கையிலும் தூங்குவனோ அவன் அபிநிர்முக்தன் என்றும் அப்யுதிதனென்றும் சொல்லப்படுவான். அப்படியிருத்தல் பாபமாகையால் யதாகாலத்தில் ஸந்தியாகாயத்ரீஜபம் முதலியன செய்யவேண்டும். பிறகு ஸமிதாதாநம் செய்யவேண்டும். அதன் பிறகு பிக்ஷாசரணம் செய்யவேண்டும். ப்ராஹ்மணன் முதலிய மூவர்கள் பவதி என்னும் சப்தத்தை பூர்வத்திலும் நடுவிலும் கடையிலுமாக உச்சரித்து பிக்ஷைசெய்யவேண்டும். தாயாரையாவது தங்கையையாவது சிறியதாயார் பெரியதாயார் ஆகிய இவர்களையாவது பிக்ஷையை யாசிக்கலாம். குருக்ருஹத்தில் பிக்ஷையை யாசிக்கலாகாது. ஜ்ஞாதிகளிடத்திலும் பந்துக்களிடத்திலும் பிக்ஷை செய்யலாகாது. கிடைக்காதபக்ஷத்தில் முன்சொல்லியவர்களைவிட்டு பின்சொல்லியவர்களிடம் பிக்ஷைசெய்யவேண்டும். அதாவது, முதலில் பந்துக்களிடத்திலும், அடுத்தபடி ஜ்ஞாதிகளிடத்திலும் அதற்கடுத்தபடி ஆசார்யனிடத்திலும் பிக்ஷைசெய்யலாம். 'யதிஶ்ச ப்ரஹ்மசாரீ ச பக்வாந்நஸ்வாமிநாவுபௌ' ஸந்யாஸிகள் ப்ருஹ்மசாரிகளாகிய இவர்கள் பக்வாந்நத்துக்கு உரியவர்களேயொழிய வேறுவழியாய்ப் புஜிக்க வழியில்லையாதலால், பிக்ஷையாலேயே ஜீவிக்க வேண்டுமென்று விதித்தது. இப்படி இவர்கள் ஸமிதா தானம் பிக்ஷாசரணம் இவைகளை உடம்புஸரியாக இருக்கும்பொழுது ஏழுநாள் வரையில் செய்யாதிருப்பானேயாகில் அவன் வ்ரதலோபமுள்ளவனாய் அவகீர்ணியாகிறான். அதற்குரிய ப்ராயச்சித்தம் செய்யவேண்டுமென்றிருப்பதால் அவைகளை விடலாகாது. அந்த பிக்ஷையை ஆசார்யனிடத்தில் ஸமர்ப்பித்து அவர் உத்திரவின்பேரில் புஜிக்கவேண்டும். எப்பொழுதும் குருவினிடத்தில் ஆடம்பரமில்லாமல் அவருடைய சயநத்துக்கும் ஆஸநத்துக்கும் தாழ்ந்த சயநாஸநங்களை உடைத்தாயிருக்கவேண்டும். யதேச்சமாக இருக்கக்கூடாது. வேறொருவருடன் ஸம்பாஷிக்கும்பொழுதும் அவர் பெயரைச்

சொல்லலாகாது. அவர்நடை உடை பாவனைகளை அநுஸரிக்கலாகாது. எந்த விடத்தில் குரு நிந்தை ஏற்படுமோ அந்தவிடத்தில் இருக்கக்கூடாது.

ஆசாரியன் பிதாமாதா ஜ்யேஷ்ட ப்ராதா ஆகிய இவர்கள் பீடிக்கப்பட்ட நிலைமையிலிருந்த போதிலும் அவர்களை அவமதிக்கலாகாது. ஏனென்றால் ஆசார்யன் ப்ரஹ்மத்தின் மூர்த்தியாயும் பிதா ப்ரஹ்மாவின் சரீரமாகவும் மாதா பூமியின் சரீரமாகவும் சொல்லியிருப்பதாலும் தாய் தந்தையர்கள் புத்திரன்விஷயத்தில் எந்த க்லேசத்தை ஸஹிக்கிறார்களோ தாயாருக்கு கர்ப்பவேதனையில்உண்டான கஷ்டம், தந்தைக்கு அந்தபுத்திரனை ரக்ஷிப்பதில் உண்டானகஷ்டம் இவைகள் இருப்பதினால் அவைகளுக்கு வருஷ ஸஹஸ்ரங்களாலும் பதில்செய்யமாளாது என்று சொல்லியிருப்பதாலும், இவைகளையே குருகுலவாஸம் செய்யும் சிஷ்யனுக்கு அடியிலே இந்த தர்மத்தையே உபதேசிப்பதாலும், மாதாபிதாக்களுக்கும் ஆசார்யனுக்கும் எப்பொழுதும் ப்ரியத்தைச் செய்யவேண்டும். அந்த மூவரும் ஸந்தோஷித்தார்களாகில் எல்லா தபஸும் நிறைவேறிவிடும்.

ஆகையினால் தேவதைகள் கோக்கள் பிராம்மணர் ஸித்திபெற்ற பெரியோர் ஆசாரியர் இவர்களைப் பூஜித்துவரவேண்டும். அகாலத்தில் மேக கர்ச்சனைமுதலியவை யுண்டாகையிலும் அமாவாஸ்யை முதலான பர்வ காலங்களிலும் ஆசௌசங்களிலும் கிரஹணம்முதலானவை உண்டானபோதும்வேதாத்தியயநம் செய்யாது மேற்கூறியகாலங்களில் செய்துவந்தால் ஸித்தியை அடைவார்கள். கீழ்க்கூறிய ப்ருஹ்மசாரிகள் நைஷ்டிகனென்றும்உபகுர்வாணனென்றும் இருவகுப்பினர். நைஷ்டிக ப்ருஹ்மசாரி எவன் என்றால் கௌபீநம் தண்டம் அஜிநம், மேகலை முதலியவைகளைத்தரித்து காஷாய வஸ்த்ரத்துடன் வேதத்தை அத்தியயநம் செய்வதற்குரிய ப்ருஹ்மசர்யத்தை அனுஷ்டித்து இந்த தேஹம்விடுமளவும் ஆசார்ய ஸமீபத்திலேயே நியதனாய் வஸிப்பவன். இவனுக்கு விவாஹமுமில்லை ஸந்யாஸமுமில்லை. இவன் கர்பாதாநம் முதலாக நாலுவேத வ்ரதங்களீறாக வுள்ள ப்ராஹ்ம ஸம்ஸ்காரங்களால் ஸம்ஸ்காரத்தை அடைந்து நான்கு வேதவ்ரதங்களை அநுஷ்டித்து நைஷ்டிகனாகவேண்டும். இல்லாமல்போனால் அத்யயந ஸாபல்யமில்லை என கருடபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வ்ரதசர்யம் தபோ பைக்ஷம் ஸமித்யோ நித்யகர்ம ச ।
ஸ்வாத்யாயோ மௌநவ்ருத்திஸ்ச ஸமித்யம் ப்ரஹ்மசாரிணாம் ॥

எனச்சொல்லப்பட்ட வ்ரதானுஷ்டானம், தபஸ், பிக்ஷை எடுப்பது இருவேளை ஸமிதாதாநம் வேதமோதுவது குருகுலவாஸம் ஆகிய இவைகள் இரண்டு ப்ருஹ்மசாரிக்கும் பொதுவானது. நைஷ்டிகன் ஆயுஸ் உள்ளவு



இக்கோட்பாடுகளை ஆராயுமிடத்தில் கோயில்திருமலை பெருமாள் கோவில் மூன்றே, திருநாராயணபுரம் சேர்ந்து நான்கோ, ஸ்ரீவைஷ்ணவர்கள் ப்ரதானமாய் பஹுமானித்துவந்ததில் திவ்யதேசங்கள் என்று ஏற்படுகிறது. ஸ்ரீதேசிகன்மேல் சொன்ன நாலு திவ்யதேசத் தெம்பெருமான்களையும்பற்ற மங்களாசாஸந ச்லோகங்கள் நாலு அருளிச்செய்திருக்கிறார். அதன் முடிவில் அந்த நாலுதிவ்ய தேசங்களிலும் அத்திகிரி யருளாளப் பெருமாளான வரந்தரும் பெருமாள் திருவாராதனமாகவே திருவுள்ளம்பற்றி அருளிச்செய்திருக்கிற விசேஷம் திருவுள்ளம்பற்றத்தக்கது. ஹம்ஸஸந்தேசத்தில் மார்க்கக்கிரமம் அருளிச்செய்யும் வரிசையில் திருவேங்கடம் பெருமாள்கோவில் திருவத்திகிரி திருவேஃகா, திருவெள்ளறை, திருவரங்கம், திருமாலிருஞ்சோலை, இவைகள் மாத்திரமே அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஸுவர்ணமுகி வேகவதி நூபுரகங்கை தாம்பிரபர்ணி இந்த நதிகள் மாத்திரமே ப்ரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறன. "ஐநவடி ஈயோயே ஈம் ஷடியிகவா" (பிறகு நடுநாட்டைத்தாண்டி) என்று அருளிச்செய்யப்பட்டிருப்பதுண்டு. ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தில் யோகஸ்தானாந்வேஷணம் பண்ணும் ப்ரகரணத்தில் அருளிச்செய்யப்பட்ட விசேஷங்கள் ஸாவதானமாகத் திருவுள்ளம்பற்றத்தக்கினவை.

1. திருவயோத்தியை பாஷண்டிகளின் கூட்டம் அதிகமாகத் தலையெடுத்து நிவ்ருத்தி தர்மம் தலையெடுக்க ஒட்டாமல் செய்து விட்டிருப்பதால் பரமைகாந்திகள் விலகிவிட்டிருக்கிறார்களென்று உதாஸிக்கப்பட்டது.

2. வடதிருமதுரை - துவாரகையை ஸமுத்திரம் உருக்குலைத்து விட்டதுபோல இதை அதர்மம் உருக்குலைத்து விட்டிருக்கிறதென்று உபேக்ஷிக்கப்பட்டது.

3. திருஸாளக்கிராமம். ஸாளக்கிராம சிலைக்குள்ளிருக்கும் அற்பப் பொன்னுக்காக அலையும் லோபிகள் என்று ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால் யோகாப்பியாஸம் செய்யத் துவக்கியவர்கள் பலவிக்னங்களால் தடைபட்டு இதை விட்டு விட்டிருக்கிறார்களென்று உதாஸிக்கப்பட்டது.

4. காசி-வேதபாஹ்யர்களும் நாஸ்திகர்களுமாகிய ராஜாக்களின் ஸாமீப்யத்தால் சௌசாசாரமில்லாதவர்களும் பகவத்தர்மம் தெரியாதவர்களும் பாபமே வடிவானவர்களுமாய் பலரும், சாதுக்கள் மூன்று நாலுபேருமாயிருக்கிறபடியால், ஸமாதிக்கு வழியாகிய தாரணை தியானங்கள் சித்திக்க இடமாமென்பதாக என் மனம் நம்பவில்லை யென்று குறைகூறப்பட்டது. மேலே தக்ஷிணபதத்தில்.

5. திருநாராயணபுரம் - மஹாராஜா ஆசையோடு கடாக்ஷித்து ஸஹ்யபர்வதம் ஸமீபத்திலிருப்பதால் காற்று அஸஹ்யமான வேகத்தோடு வீசுமானதுபற்றி மனதிற்குத் திகிலாயிருக்குமாகவே புத்தி துர்ப்பலமாயிருக்கிற ஜீவன் இங்கே யோகம் செய்ய எப்படி முடியும் என்று அருளிச்செய்து "நல்லது, இது ஒரு உயர்ந்த ஸ்தானமாகலாம், மற்றும் யோகாப்பியாஸத்திற்குரிய ஸ்தானங்களையும் பார்க்க விரும்புகிறேனென்று மேலே ரதத்தைச்செலுத்தும்படி நியமித்தார்.

6. திருவனந்தபுரம் - பரசுராமன் ப்ரவ்ருத்தி தர்மத்தைப் ப்ரகிருதம் உபதேசித்துக் கொண்டிருக்கிறார் என்றும் தனமதம்பெருத்த துஷ்டர்கள் பிச்சைக்காரர் செய்யும் ஸ்தோத்திரத்திற்கு உடம்பு பொங்கி ஸாத்விகர்களான முமுக்ஷு மஹாபுருஷர்களை பருஷபாஷணம் செய்து திரஸ்கரிக்கிறார்களென்றும் குறைகூறப்பட்டிருக்கிறது.

7. மலையபர்வதம்-அகஸ்தியரது ஆச்ரமம். பூலோக ஸவர்க்கமென்றும் காமோத்தீபகமான இடமென்றும் இங்கே ஜிதேந்திரியர்களான மஹர்ஷிகள் வாஸம் செய்வது ஆச்சரியமாயிருக்கிறதென்றும் நாம் வேறிடம் தேடுவோமென்றும் தாண்டப்பட்டது.

8. பாண்டியநாடு. ஸந்தோஷம் பக்தி மயிர்க்கூச்செறிதல் இவற்றோடு ஆழ்வாரையும் திருவாய்மொழியையும் கொண்டாடியிருக்கிறது.

9. திருமாலிருஞ்சோலை - கைகளைக்கூப்பிக்கொண்டு அழகரது கருணையை ஸ்துதிசெய்து திருவணைக்காக ஸமுத்திரத்தில் போடப்பட்ட மலைகளினுடைய குகைகளில் தென்ஸமுத்திரின் அலைகள் புகுந்து நாடுமுழுதும் ஜநங்கள் செவிடாய்ப் போகும்படி சப்தம் செய்வதால் யோகம் கைகூடுமென்பதாய் நினைக்க இடமில்லையென்று மறுக்கப்பட்டு அங்கிருந்து வடகிழக்காக திருத்தேரைச் செலுத்தும்படி நியாமிக்கப்பட்டது.

10. சோழநாடு - நாவளம்பொலிந்த சொற்களைக்கொண்டு நரஸ்துதி செய்து பணம் பறித்துத் திரியும் கவிகள் நிறைந்ததென்றும் இங்கே யோகவித்தியை ஆசைப்படாமல் விஷித்தமானதும் கைநழுவிப்போய் வட்டிக்கு ஆசைப்பட்டு முதலையும் இழந்தகதையாய் முடியுமென்றும் வெறுக்கப்பட்டது.

11. ஸ்ரீரங்கம் - சாரதியால் குறித்துக்காட்டப்பட்ட இந்த திவ்யதேசத்தை மனஸ்ஸந்தோஷத்தோடு மஹாராஜா ஆதரவாக ஸேவித்து கைகளைக்கூப்பிக்கொண்டு ஸ்ரீரங்கநாதனை ப்ரார்த்தித்து "இது முதன்மையானஸ்தானம், இருக்கட்டும், மற்றும் எதுவாவது தெரிவிப்பது இருக்கிறதோ" என்று கேட்டருளியிருக்கிறார்.



12. தொண்டைநாடு-ஸாரதி இதைக்காட்டிலும் இதில் திருவத்திகிரியில் பிருஹ்மாவின் அசுவமேதத்தில் பகவான் ஆவிர்ப்பவித்தருளினரென்று குறிப்பித்து இந்த தேசத்தார் யாவரும் பிறந்ததுவே முதலாக தேவதாந்தர ஸம்பந்த மற்று பரமைகாந்திகளாய் பரதேவதா பாரமார்த்திய ஜ்ஞானமுடையவர்களாக இருக்கிறார்களென்று கொண்டாடி அதிகாரிகளாயிருப்பவர்கள் ஆசார்யாநுஜ்ஞையால் ச்ரௌத கர்மாநுஷ்டானம் செய்கிறார்களென்றுகாட்ட மஹாராஜா ஸந்தோஷம் பருமானம் இவற்றோடு கைகளைக் கூப்பி அருளாளனை ஸ்தோத்ரம்செய்து முஹூர்த்தம் த்யானம்செய்து, "ப்ரபத்தியை ஸாங்கமாக அநுஷ்டித்து நிர்பரனும் நிர்ப்பயனுமாய் விட்டேன்" என்று அருளிச்செய்து பார்க்கவேண்டியதெல்லாம் பார்த்தாய் விட்டதல்லவா என்று ஸாரதியைக் கேட்டருளினர்.

13, திருவேங்கடமாமலை - உடனே ஸாரதி இந்த திருமலை ப்ரத்யக்ஷமான பரமபதம்போலிருப்பதும் பல இடங்கள் சுற்றியமைந்த நமக்கு இளைப்பாறுவதற்கென்று எம்பெருமான் தானே ஏற்பாடுசெய்ததுபோலிருப்பதும் கலிகல்மஷங்களைப் போக்குவதுமான இடம் என்றும் ஸத்வகுணம் தலையெடுத்து பராவரதத்வ விவேகம் கைவந்திருப்பதால் இங்கு திர்யக்குக்கள்கூட பரஸ்பரம் விரோதமின்றி வாழ்கின்றனவென்றும், இங்கே ஒகுமஹான் எம்பெருமானது தயையை ஸ்துதிசெய்துகொண்டேயிருக்கிறார் என்றும் குறித்துக்காட்டுகிறார். மஹாராஜா பருமானத்தோடு கடாக்ஷித்து ஸாஷ்டாங்கமாக தண்டனிடுகிறார். பிறகு ஸாரதி கோயில் திருமலை பெருமாள்கோவில் இந்த திருப்பதிகளைக் கடாக்ஷித்தருளிற்றே, இப்படி சில திவ்யதேசங்கள் பிருஹ்மாகூட கொண்டாடும்படியான பெருமையோடு தென்தேசத்தில் விளங்குகின்றன. இந்த ஸ்தானங்கள் கலியின் கோலாஹலத்தை தூரப்போக்கும் வலிமையுடையவைகளாகையால் இவற்றில் ஒன்றில் யோகாரம்பம் செய்யலாம்" என்று விண்ணப்பம் செய்கிறார். "பூமி முழுவதும் நாம் சுற்றிவந்தோம், கலியின் ஆதிராஜ்யம் வலுத்திருப்பதால் யுக்தமான இடம் கிடைப்பது ஸுலபமாக இல்லை. ஆனாலும் நிவ்ருத்தி தர்மாநுஷ்டானம் செய்யத்தக்க ஸ்தானத்தை நான் நிர்த்தாரணம் செய்யவேண்டும்" என்று அருளிச்செய்து, மஹாராஜா நியமித்தருளுகிறார்.

இந்த ப்ரகரணத்தின் தாத்பர்யத்தைப் பராமர்சித்தால் மேல் குறிப்பிட்ட திவ்ய ஸ்தலங்களில் ஸ்ரீதேசிகன் அபிமான தாரதம்மியம் அங்கீ

கரித்தே தீரவேண்டும். உகந்தருளின நிலங்களில் ஆழ்வார்களின் மங்களாசாஸநத்தைக்கொண்டு நம்மவர் பெருமை கொள்ளுவது ஸம்ப்ரதாயமாகவிருக்கிறது. ஸ்ரீரங்கநாதனுக்கு "பதின்மர் பாடும் பெருமாள்" என்று கட்டியம் கூறுகிறது இன்றளவும் நடந்தேறிவருகிறது. ஒரு உத்ஸவத்தில் திருமலைமேல் திருவேங்கடமுடையானுக்கு "பதின்மர் பாடும் பெருமாளென்று கட்டியம் கூறிவிட்டதாகவும் பகவத் ஸேவைக்காக ஸ்ரீரங்கத்திலிருந்து அவ்விடம் எழுந்தருளியிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் சிலர் அக்ஷேபித்ததாகவும், அப்போது பெரிய விவாதம் ஏற்பட்டதாகவும் திருவேங்கடமுடையானே அங்கொருவரிடத்து ஆவேசித்து 'சோழியன் கெடுத்த கேடடா, எனக்கு அந்த பிருது வேண்டாமடா' என்று அருளிச்செய்து விவாதத்தை சமிப்பித்ததாகவும் ஐதிஹ்யமுண்டு. இவ்வம்சத்தைப் பரிசீலனம் செய்யுமிடத்தில் ஆழ்வார் மங்களாசாஸன விஷயத்திலும் இப்படி அபிமான தாரதம்மியம் கற்பிப்பது நியாயவிரோதமாகாதென்று ஸித்தமாகிறது. இதுபோலவே ஆழ்வார்களின் ப்ரபாவ பேதத்தைக்கொண்டும் மங்களாசாஸனம் செய்தருளியவர்கள் இத்தனை பெயர் என்னும் தொகையைக்கொண்டும் பாசுரத்தின் தொகை போக்கு கருத்துக்களை கொண்டும் திவ்யதேசங்களுக்கு பெருமையில் தாரதம்மியம் கற்பிப்பதும் நியாயமேயாமென்னத் தடையில்லை.

இம்முறையைக்கொண்டு அவரவர்கள் புத்தி ஸாமர்த்தியத்துக்குத் தக்கபடி உகந்தருளின நிலங்களின் பெருமையைப்பற்றி ஸாராம்சமாக விசாரம்செய்யலாம். நாம் இங்கு ஒரு சிறிய வியாஸம் எழுதி பெருமாள் கோயில் திருவயிந்திரபுரம் என்கிற இவ்விரண்டு உகந்தருளின நிலங்கள் விஷயமாகக் கொஞ்சம் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறோம்.

1. நம்மாழ்வார் முதலடியிலே அயர்வறுமமரர்கள் அதிபதியென்று பேருளான் திருநாமமான தேவராஜன் என்பதைப்பாடி அவன் துயரறு சுடரடி தொழுதெழுன்மனனே என்று தம் திருவுள்ளத்தை அநுசாஸிக்கிறார்.

2. அஞ்சிறையமட நாராயிலே 'அருளாத நீர் அருளி அவராவிது வாராமுன் அருளாழிப்புட்கடவீ ரவர்வீதி யொருநாளென்று அருளாழியம்மானைக் கண்டக்காலிதுசொல்லி அருளாழி வரிவண்டே யாமுமென் பிழைத்தோமே' என்று 'காருண்ய ராஶி:' என்கிற திருநாமத்திற்கு பிரதிநாமமான அருளாழியம்மானென்கிற திருநாமத்தைச் சொல்லித்தன் வீதியேறக் கறையணி மூக்குடைப்புள்ளைக் கடாவி ஒரு நாளாகிலும் உலாவியருளவேண்டுமென்று பிரார்த்தித்துத் தூது விடுகிறார்.



3. முதலாழ்வார்களில் நடு ஆழ்வாரான பூதத்தார், 'என்னெஞ்சமேயான்.........உலகேத்தும் ஆழியானத்தியூரான்' என்று முந்தரப்பாடி மேலே 'அத்தியூரான் புள்ளையூர்வான் அணிமணியும், துத்திசேர் நாகத்தின் மேற்றுயில்வான்' என்று திருவத்திமாமலையில் மூல உத்ஸவ சயனபேரங்களை அடைவே மங்களாசாஸநம் செய்தருளியிருக்கிறார்.

4. திருமாமகளைப்பெற்று மென்னெஞ்சகங் கோயில்கொண்ட பேரருளாளன் பெருமை போக்கற்றவன்' என்று தமக்குள் பெருமை சொல்லிக்கொண்டிருக்கிறார்.

5. ஸ்ரீதேசிகன்,

'வம்மின் புலவீர்(இது கூன்)அருளாளப்பெருமாளென்றும் அருளாழி யம்மானென்றும்
திருமாமகளைப்பெற்று மென்னெஞ்சங் கோயில்கொண்ட பேர்
அருளாளனென்றும் வியப்பாவிருதூதும்படி கரைபுரண்ட
கருணைக்கடலை யெவ்வண்ணம் பேசுவீ ரீதென்ன பாங்கே'

(இது அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்) என்று இந்த திருநாமங்கள் திருவத்தியூர் வரந்தரும் பெருமாளுக்கு அஸாதாரணமென்று விவரித்தருளியிருக்கிறார்.

6. மேலும்,

'[illegible]'

என்று திருவாய்மொழி முதல்பத்து திருவத்தியூர் நின்றருளிய வரதன் விஷயமென்று குறித்தருளியிருக்கிறார்.

7. பெருமாள் கோவிலில் நம்மாழ்வார் திவ்யமங்கள விக்ரஹம் 'அவன் துயரறுசுடரடி தொழுதெழுன்மனனே' என்று தம் திருவுள்ளத்தைக்குறித்து அநுசாஸித்தமை தோற்ற திருமார்பிலே திருக்கையை முகமாகவைத்த ஜ்ஞானமுத்திரையாக இன்றளவும் ஸேவை ஸாதித்தருளுகிறார்.

8. இந்த ஆழ்வார் திருமேனி கலியன் உகந்தருளப்பண்ணி திருப்பிரதிஷ்டை செய்வித்ததென்று ஸம்ப்ரதாயம் அப்போதே ஆவேச முகமாக இந்த ஸாரஸ்யம் ப்ரகாசிக்கிறதம் என்றும் ஐதிஹ்யம் மேலும் பேரருளாளன் பெரிய திருவடிமேல் ஏறியருளி உத்ஸவம் கண்டருளும்போதெல்லாம் ஆழ்வார் திருவீதியில் எழுந்தருளுகிறார்.

9. கலியன்.

"நெடுவரையி னுபரிமேலாய்"
"கல்லுயர்ந்த நெடுமதிலைசூழ்
கச்சிமேய களிறென்னும்"
என்னைமனங்கவர்ந்தவீசனை"

என்று இது முதலாக அருளிச்செய்தவை யெல்லாம் பேரருளாளப் பெருமாளைப்பற்ற வென்று ஸம்ப்ரதாய வ்ருத்தங்கள் அருளிச்செய்து போருமதும் உண்டு.

10. ஆளவந்தார் இளையாழ்வார் ஸித்தாந்த ப்ரவர்த்தகராகக் கடாக்ஷித்தருள் வேண்டுமென்று பேரருளாளன் திருவடிகளில்,

"யஸ்ய ப்ரஸாத கலயா பதிர: ச்ருணோதி
பங்கு: ப்ரதாவதி ஜவேந ச வக்தி மூக: ।
அந்த: ப்ரபச்யதி ஸுதம் லபதே ச வந்த்யா
'தம்தேவமேவ வரதம் சரணம் கதோஸ்மி ॥'

(எந்த எம்பெருமானுடைய அனுக்கிரஹலேச மாத்திரத்தால் செவிடன் கேட்கவும், முடவன் வேகமாய் ஓடவும், ஊமை நன்ருகப் பேசவும், குருடன் ஊன்றிப்பார்க்கவும், மலடி பிள்ளையைப் பெறவும் வல்லமையுடையவராவார்களோ, அப்படிப்பட்ட வரந்தருந்தேவனை சரணமடைகிறேனென்று பாங்யாஸம் செய்தருளியிருக்கிருர்.

11. ஸ்ரீபாஷ்யகாரர் பேரருளாளனுல் மஹாபத்தியிலிருந்து மீட்கப்பெற்று அவருக்கு திருமஞ்சன கைங்கர்யம் செய்தருளிவந்தார். ப்ரேஷமந்த்ரோபதேச பூர்வகமாக ஸங்யாஸாச்ரமம் ப்ரஸாதிக்கப்பெற்ருர். ஆறு வார்த்தை அருளிச்செய்யப் பெற்றதுமுண்டு. "நிரஸ்ய போகாசாம் ஸர்வாம் வரதம் சரணம் கத:"

(வேறு போகாசை யெல்லாவற்றையும் விட்டு வரதனைசரணம் அடைந்தேன்) என்று சரணகதி செய்திருக்கிருர். திருவரங்கப்பெருநகரில் பெரியயபெருமாள் திருமுன்பே பெரியகத்யம் அருளிச்செய்த போதும் "ப்ராணார்த்திஹர" என்று இந்த திருநாமத்தால் ஸம்போதித் திருக்கிருர். இது அவதார விசேஷத்தில் திருநாமம் என்று ஸ்ரீதேசிகன் நிர்வாஹம்.

11. நம் ஸம்ப்ரதாயத்திற்கு முக்கிய க்ரந்தமாகிய ச்ருதப்ரகாசிகை "வரதம் விரதா ஸ்ரீசம்" என்கிற மங்களத்தோடு திருவவதரித்தது.



12. ரஹஸ்ய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகரான கிடாம்பியாச்சான் ப்ரணதார்த்திஹரர் என்றும் திருநாமத்தையும் ஸ்ரீபாஷ்ய ப்ரவர்த்தகரான நடாதூர் அம்மாள் வரதன் என்னும் திருநாமத்தையும் பெற்றிருந்தார்கள்.

13. ஸ்ரீபாஷ்யகார சிஷ்யர்களில் முக்கியதமரான கூரத்தாழ்வான் பேரருளாளனிடத்தில் ஈடுபட்டு ஸ்தோத்திரம் அருளிச்செய்திருப்பது ஸர்வவிதிதம்.

14. ஸ்ரீதேசிகனுல் பஹுமானிக்கப்பட்ட பட்டர் ஸ்ரீரங்கநாதனை ஸ்தோத்ரம்செய்யும்போது "வரத ப்ரணார்த்திஹர' என்கிற இந்த இரண்டு திருநாமங்களையும் அருளிச்செய்கிருர்.

1. திருவயிந்திரபுரத்தின் விஷயத்தில் கலியன் அருளிச்செய்த திருமொழி ஒன்று அல்லது வேறு ஒருபாசுரமாவது ஒருபாசுரத்துண்டாவது பதமாவது இல்லை.

2. கலியனும் திவ்யதேச வரிசையில் அருளிச்செய்து போய்விட்டாரேயன்றி மறுபடி எங்கும் அவ்வெம்பெருமானை நினைக்கவும் இல்லை.

3. ஆழ்வார் இந்த திவ்யதேசத்தையாவது அவ்வெம்பெருமானுடைய திருநாமத்தையாவது நெஞ்சிலும் நினைந்திலர்.

4. மற்றையாழ்வார் யாரும் இப்பெயரை யறியவேயில்லை யென்னலாம்.

5. நம் ஸம்ப்ரதாயஸ்தர்களில் கீழ் நாம் குறிப்பிட்ட அல்லது வேறு மஹாபுருஷர்கள் ஒருவராவது இந்த திருப்பதியையாவது பெருமாளையாவது அவர் திருநாமத்தையாவது நினைக்கவில்லை.

6. யாரும் அவ்வெம்பெருமான் திருநாமங்களாகிய தெய்வநாயகள், அடியவர்க்கு மெய்யன், அச்சுதன் இம்மூன்றில் எதையும் தமக்குத் திருநாமமாகக் கொள்ளவில்லை.

இந்த முகாந்தரங்களைக்கொண்டு யோசிக்குமிடத்தில் பெருமாள்கோவில் திருவயிந்திரபுரம் இரண்டில் முந்தியது மஹான்களின் அபிமானத்திற்கு விசேஷபாத்திரமா யிருக்கிறபடியால் திருவயிந்திரபுரத்தைக் காட்டிலும் எத்தனையோமடங்கு விசேஷ பஹுமானத்திற்கிலக்கா யிருக்கிறதென்பது நிர்விவாதமான விஷயம்.

இனி ஆழ்வார்களும் பூர்வாசார்யர்களும் மற்றைய அபியுக்தர்களுமாக அம்மஹாபுருஷர்கள் அனைவரும் ஒருங்குசேர்ந்து ஒருதட்டாகவும் இம்மஹாபுருஷர் ஒருவர் மாத்திரமே ஒருதட்டாகவும் மதிக்கும்படிக்கீடான

அவதாரபக்தி ஜ்ஞான கல்யாண குணகணுபதானங்களை யுடைய நம் ஸ்ரீதேசிகனுடைய அபிமானத்தைக்கொண்டு அவ்விரு திவ்ய தேசங்களையும் அவ்விரு திவ்யதேசத் தெம்பெருமான்களையும் அவர்களின் அநுபவப்ரகாரங்களையும் அநுபவரஸகமநிகா விபேதங்களையும் கொஞ்சம் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறோம்.

"ஆழவமுக்கி முகப்பினு மாழ்கடனீர்
நாழிமுகவாது நானுழி."
"தந்தம் மதியளவேயாகுந்திறம்."

ஸ்ரீதேசிகன் தத்பரமாக ப்ரபந்தங்கள் அருளிச்செய்துவிட்ட போதன்றிப்பின் நினைப்பதும் செய்யவில்லை யென்று ஹம்ஸஸந்தேச ஸங்கல்ப ஸூர்யோதய ஸந்தர்ப்பங்களால் வ்யக்தமா யிருப்பதோடு வாஸயோக்கியமும் ஜபோசிதமும் தமக்கு ஸித்திக்ஷேத்ரமுமாகிய திருவயிந்திரபுரத்தை யோகாரம்பத்திற்கு உரிய ஸ்தானத்திக்காகக் தேடியலையும் ப்ரகரணத்தில் ப்ரஸ்தாவம் செய்யாமலே விட்டுவிட்டதற்கு ஆந்தரமான அபிப்ராயவிசேஷம் எதுவோ இருந்து தீரவேண்டு மாகையால் சோழநாட்டை வெகுவேகமாய்த் தாண்டிவிட வேண்டுமென்று குலைப்பித்ததுபோலே நடுநாட்டைத்தாண்டி என்று குறிப்பித்திருப்பதைக்கொண்டு திருவயிந்திரபுரத்தின் விஷயத்தில் ஸ்ரீதேசிகனுக்குத் திருவுள்ளம் பாங்காக இல்லையென்று ஏற்படுகிறது. ஆகையால் பெருமாள் கோவிலுக்கும் அந்த திருப்பதிக்குமாக சர்ச்சை ஸரஸமானதன்றென்று பலர் திருவுள்ளம் பற்றுகிறார்கள்.

ஸ்ரீதேசிகன் திருவவதாரஸ்தலம் பெருமாள்கோவில் பெரியதிருவடி நயினாரையும் ஹயக்ரீவரையும் ப்ரத்யக்ஷீகரித்த ஸ்தலம் திருவயிந்திரபுரம். ஓரிடத்தில் பெருமாள் ப்ரணதார்த்திஹரர். ஓரிடத்தில் அடியவர்க்குமெய்யனார். ஓரிடத்தில் வேழமலையுச்சி பெருமாள் எழுந்தருளி யிருக்குமிடம். ஓரிடத்தில் ஔஷதகிரிஅடி. இப்படி சில ஒற்றுமை யிருப்பதைக்கொண்டு சர்ச்சை ஸமரஸமாகலாமென்று மற்றப் பலர் நினைப்பர்.

திருவயிந்திரபுரத்தில் ஸ்ரீதேசிகன் திருமாளிகையிருக்கிறது. பெருமாள் கோவியிலுமிருக்கிறது. ஸ்ரீரங்கத்திலு மிருக்கிறது. ஸ்ரீதேசிகன் அதிகநாள் திருவயிந்திர புரத்தில் வாஸம் செய்தருளினார். ஸ்ரீரங்கத்தில் நியத வாஸம் செய்தருளினார். தினசர்யையில் "வாஸஸ் ஸ்ரீரங்கதாமநி" (உறைவிடம் திருவரங்கம்) என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஒருமுறைக்கு இருமுறை ஸத்யாகாலத்திலே பன்னிரண்டு வர்ஷம் எழுந்தருளி யிருந்தார்.



ஶாஶ்வதமான ப்ரஹ்மபுரமென்று பேர்பெற்ற ஸ்தூலஶரீரத்தில் ப்ரஹ்மரந்த்ரமென்கிற தலை வாசலைத் திறந்து கொண்டு புறப்பட்டு நாடிகளோடே சங்கிலித் துவக்குப் போலே பிணைத்து வைத்த ஸூர்யகிரணங்களை ஸுஷும்நமாக்கி வைகுந்தம் புக வழிப்படுத்தும்.

முன் கருவி யீரைந்து மனத்திற்கூட்டி
முக்கிய மா மருத்திலவை சேர்த்ததெல்லாம்
நன்குணரு முயிரிற் சேர்த்தைம்பூதத்தை
நண்ணுவித்துத் தான்றன்பால் வைக்குநாதன்
ஒன்பதுடன்வாச லிரண்டுடைத்தா யுள்ளே
யொருகோடி துயர்விளைக்கு முடம்பாயொன்றும்
வன்சிறையின்றலைவாசற் றிறந்து நம்மை
வானேறு வழிப்படுத்த மனமுற்றானே. 13

இதி ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீ ப ர ம ப த ஸோ பா நே

|| ஷஷ்டோத்க்ரமணபர்வ ||

|| ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ||

---

ப்ருஹ்ம ரந்திரம் என்கிற பதினொரு த்வாரங்களையுடைய, ப்ரஹ்மபுரம் - பரமாத்மா வஸிக்கும்படியான இடம். ஸ்தூலஶரீரத்தில் - ஸ்தூலமாய் பார்க்கப்படும் இந்த ஶரீரத்தில். ப்ரஹ்மரந்த்ரமென்கிற - ப்ருஹ்மரந்திரம் என்கிற பெயரை உடைய, தலைவாசலை - முக்யமான வாசல்படியை, அன்றிக்கே தலையில் இருக்கும் வாசல்படியை. நாடிகளோடே - நரம்புகளோடே, சங்கிலித்துவக்குப்போலே - சங்கிலி ஒன்றோடொன்று சேர்ந்திருக்குமாப்போலே, பிணைத்துவைத்த - ஸம்பந்தப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிற, அதாவது சாந்தோக்யோபநிஷத்தில் 'இந்த நாடிகளில் இருந்து புறப்பட்டு ஸூர்யன் இடத்தில் சேர்ந்தும், ஸூர்யன் இடத்தில் இருந்து புறப்பட்டு நாடியில் சேர்ந்தும், எப்படி ஒரு ஊரில் இருந்து ஒரு ஊருக்குப்போகும் வழி இரண்டு ஊர்களையும் ஸம்பந்தப்படுத்தி யிருக்குமோ அதைப்போல' என்று சொல்லப்பட்டிருக்கிறது இங்கு விவக்ஷிதம். ஸுஷும்நமாக்கி-பிடித்துக் கொள்ளுவதற்கு ஆதார

மாகச் செய்து, வைகுந்தம்புக - வைகுண்ட லோகத்தில் ப்ரவேசிப்பதற்காக, வழிப்படுத்தும் - அர்ச்சிராதி மார்க்கத்திலே போகும்படி செய்வான்.

இப்படிக்கீழ் விஸ்தாரமாக அருளிச்செய்த உத்க்ரமண க்ரமத்தை ஸங்க்ஷேபமாய் அநுஸந்திக்கும் பொருட்டு ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்—'முன்கருவி' என்றாரம்பித்து.

[ப - ம்.] முன் - முதலிலே, கருவி - இந்திரியங்கள், ஈரைந்தும் - இரண்டு ஐந்துகளையும், கர்மேந்திரியங்கள் ஐந்து, ஜ்ஞாநேந்திரியங்கள் ஐந்து ஆகிய பத்து இந்திரியங்களையும், மனத்தில் கூட்டி - மனதிலே சேர்த்து, முக்கியமாம்-முகத்திலே ஸஞ்சரிக்குமதான, மருத்தில் - வாயுவில், ப்ராணவாயுவில் என்றபடி, அவை - அவைகளை, சேர்த்து - சேரும்படி செய்து, அது எல்லாம் - அவை எல்லாவற்றையும், நன்கு - நன்றாக, உணரும் - அறிகிற, ஜ்ஞாதாவாகிய என்றபடி, உயிரில்-ஜீவாத்மாவின் இடத்தில், சேர்த்து, 'அதை' என்று ஒரு பதம் சேர்த்துக்கொள்ள வேண்டும், அந்த ஜீவாத்மாவை, ஐம்பூதத்தை - ஸூக்ஷ்மமான பஞ்சபூதத்தை, நண்ணுவித்து - கிட்டும்படி செய்து, அதாவது பஞ்சபூதங்களோடே சேர்த்து, தான்-ஹார்த்தனான தான், தன்பால் - தன் இடத்தில், வைக்கும் - இளைப்பாறுவதற்காக வைத்துக் கொள்ளும், நாதன் - ஸர்வஸ்வாமியானவன், இப்படி இவனுக்கு உத்க்ராந்தியை நடத்தி, அத்தால் உண்டான ஶ்ரமத்தைத் தீர்ப்பதற்காகத் தன்னிடத்தில் விஶ்ரமிக்கும்படி செய்வதற்குக் காரணம் ஸ்வாமித்வமாகிற ஸம்பந்தம் என்றறியத்தக்கது, ஒன்பதுடன் - ஒன்பதோடுகூட, இரண்டு-இரண்டான, அதாவது பதினொன்றுகளான, ஒன்பது வாசல்களும் எப்பொழுதும் திறந்திருக்கின்றன, நாபியும், ப்ரும்மரந்திரமும் மூடப்பட்டிருக்கின்றன என்கிற வ்யத்யாஸத்தைத் தெரிவிக்கும் பொருட்டு இப்படிப் பிரித்து நிரூபித்தருளினபடி, வாசல் உடைத்தாய் - வாசல்களை உடையதாய், உள்ளே - உள்ளுக்குள்ளே, ஒரு-அத்விதீயமான, கோடி-கோடிக் கணக்கான, இது உபலக்ஷணம், எண்ணிறந்த என்றபடி, துயர்-துக்கத்தை, விளைக்கும் - உண்டாக்குகிற, உடம்பாய்-ஶரீரமாகி, ஒன்றும்-ஸம்பந்தப்பட்டு நிற்கிற, இவனோடு பிரியாமல் ஸம்பந்தப்பட்டிருக்கிற என்றபடி, வன்-த்ருடமான, தன்னால் போக்கடித்துக்கொள்ள முடியாததான, சிறையில்-ஜயிலில், தலைவாசல்-தலையில் இருக்கும் வாசலை, திறந்து, நம்மை - ஆஶ்ரிதர்களான நம்மை, வானேறுவழி - பரமபதத்திற்குப் போகிற அர்ச்சிராதி மார்க்கத்தில், படுத்த-நடத்துவதற்கு, மனமுற்றான் - ஸங்கல்பத்தைச் செய்தான். இங்கு



1 'ஊநலி கூரணஶ்ராமோ ஶ்ராணெ ஊநஃ வாராஷெ ச தம் ஸுதி வடியநு ஹஹுதெஷெநம் வரெ ச தோதநி । ஸுவிஷவிஷாஷொரி தம் ஸாயாரணெ ஸரணெ ஊபூவெ நபூயதி வரதொ நாஷீமெ ஷெ யபூயொவித ஶீஶூரஃ ॥' என்றும், 'நன்னிலமாவது நற்பகலாமது நன்னிமித்தம் என்னலு மாமதி யாதாமரங்காடியவர்க்கு மின்னிலே மேனிவிடும் பயணத்து விலக்கிலதோர் நன்னிலையா நடுநாடி வழிக்கு நடைபெறவே' என்றும், 2 'யூஊநிஷிஊ நஷ்ஷிநு காலெ ஸ வஸ ஶதாயிகாஊகூத கவாராஷூஸாநாயூம் ஷூவெஶயதி ஷூஹாஃ' என்றும் இவர்தாமே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் நிர்யாணாதிகாரத்தில் அருளிச்செய்திருப்பதை அநுஸந்திக்கவும்.
13

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டிதபூஷணம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

## ஸ்ரீ பரமபதஸோபாந வ்யாக்யானத்தில்

ஆறாவது உத்க்ரமண பர்வம் முற்றிற்று.

1. இந்திரியங்களின் ஸமூஹத்தை மனதிலும், (அப்படிப்பட்ட) மனதை ப்ராணவாயுவிலும், அந்த ப்ராணவாயுவை ஜீவாத்மாவிடத்திலும், இந்த ஜீவாத்மாவை ஸூக்ஷ்மமான பஞ்சபூதங்களிலும், இந்திரியங்களோடு சேர்ந்த ஜீவாத்மாவை எல்லாவற்றையும் விட மேற்பட்டவனான ஹார்த்தனை தன்னிடத்திலும் சீக்கிரத்தில் சேர்த்துக்கொண்டு, இவ்விதமாக தன்னை அறிந்தவன் அதாவது பக்திப்ரபத்திகளாகிற உபாயத்தை அனுஷ்டித்தவன், அதைச் செய்யாதவன் இவர்களுக்கு ஶரீரத்தைவிட்டு வெளிக்கிளம்புகிற மார்க்கத்தினுடைய ஆரம்பம் பொதுவா யிருக்கும்பொழுது அதாவது ஹார்த்தனிடத்தில் விஶ்ரமிக்குமளவும் எல்லா ஜீவாத்மாக்களுக்கும் நிர்யாணம் பொதுவா யிருக்கும், பிறகு அவரவர்களுக்குத் தகுந்தபடி பகவான் வெவ்வேறு நாடிகளாலே அழைத்துக் கொண்டு போகிறான்.

2. அந்த நிர்யாண காலத்தில் நம்மை ஒருவராலும் செய்யப்படாததான திவ்ய நகரமான வைகுண்டத்திற்கு ப்ரயாணம் புறப்படுவதற்காக நூறுக்கு மேற்பட்டதான நூற்றொன்றாவது நாடியை ப்ரவேசிக்கும்படி செய்கிறான்.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

॥ ஸ்ரீமதர்ச்சிராதிபர்வ ॥

*தெருளார்பிரமபுத்திறை சேர்ந்திடர் தீர்ந்தவர் தாம்*
*இருளார் பிரமபுரச்சிறை தீர்ந்தபின் வந்தெதிர்கொண்டு*
*அருளாலமரர் நடத்த விம்மாயை கடந்ததற் பின்*
*சுருளார் பவ நரகச்சுழலாற்றின் சுழற்சியிலே.* 14

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

## ஏழாவது அர்ச்சிராதி பர்வம்.

இனி அர்ச்சிராதிகதியின் க்ரமத்தை, நிரூபித்தருளக் கோலி, இப்படி அர்ச்சிராதிகதியால் ப்ரக்ருதி மண்டலத்தைத் தாண்டிச் சென்றவர்களுக்குப் புனராவ்ருத்தியில்லை என்றருளிச் செய்கிறார்—'தெருளார்' என்றாரம்பித்து.

[ப-ம்.] தெருள் - ஜ்ஞானத்தினால், ஆர் - பூர்ணனான, ஸர்வஜ்ஞனான என்றபடி, பிரம புரத்திறை - ப்ரும்மபுரம் என்று சொல்லப்படும் இந்த ஶரீரத்திற்கு ஸ்வாமியான பகவானை, சேர்ந்து - ஆஶ்ரயித்து, இடர் தீர்ந்தவர் - துக்கங்கள் நிவ்ருத்தி அடைந்தவர், அன்றிக்கே 'சேர்ந்து' என்று ஹார்த்தனிடத்தில் விஶ்ரமத்தைச் சொல்லி, 'இடர் தீர்ந்தவர்' என்று உத்க்ராந்தி ஸமயத்தில் உண்டான ஶ்ரமத்தைத் தீர்த்துக் கொண்டவர் என்று இப்பர்வத்தில் நிரூபித்தருளின அர்த்தத்தை அனுவதிக்கிற தாகவுமாம், இருளார் - அஜ்ஞானத்தினால் நிறைந்த, அதாவது அந்தகாரம் நிறைந்த பிரமபுரச்சிறை - ஶரீரமாகிற ஜயில், தீர்ந்தபின் - நிவ்ருத்தமான பிறகு, ஶரீரத்தை விட்டு வெளிக் கிளம்பின பிறகு என்றபடி, வந்து எதிர்கொண்டு - எதிர்கொண்டுவந்து என்றந்வயம், அதாவது தம் தாமுடைய எல்லைகளின் ஆரம்பத்திலேயே முன்வந்திருந்து அழைத்துக் கொண்டுபோக, அருளால் - பகவானுடைய க்ருபையினால், அமரர் - ஆதிவாஹிகர்களான தேவதைகள், நடத்த - இவனை வழி நடத்த, இம்மாயை - இந்த ப்ரக்ருதியை, கடந்ததற்பின் - தாண்டினபிறகு, பவ - பிறப்பு, நரக - நரகம்,



இப்படி கர்மரூபங்களாகிற பொன்னுமிரும்புமான விலங்குகளைக் கழித்து ஸூக்ஷ்மஶரீரமாகிற சிறையினின்றும் ஸௌஹார்த்ய ஸநாதநனை ஹார்த்தன் நயிப்பிக்கப் புறப்பட்டவனை பண்டிறை கொண்ட தேவர்கள் பரவஶராய் அதிபீதராய் ப்ரணதிபரராய்க் காணிக்கையிட்டுக் காண, முற்பட அர்ச்சிஸ்ஸென்றும் அக்நி என்றும் பெயரையுடைய ஆதிவாஹிகன் வந்தெதிர்கொண்டு தன் வைபவமெல்லாவற்றையும் ஸமர்ப்பித்து [1] 'சூழ் விசும்பணி முகி'லில் சொன்ன ஸத்காரத்தோடே தனக்கடைத்த வெல்லை நடத்தும்.

இவைகளாகிற, சுழலாற்றின் - சுழன்று சுழன்று ப்ரவஹிக்கும் நதியின், சுழற்சியில் - சுழலில், சுருளார் - சுருண்டுவர மாட்டார்கள், அதின் ப்ரவாஹத்திலே போய்க்கொண்டு அதின்படி சுழன்று கொண்டிருக்க மாட்டார்கள் என்றபடி. 14

இனி அர்ச்சிராதிகதியின் வரிசை க்ரமத்தையும் அங்கு செய்யப்படும் ஸத்காராதிகளின் க்ரமத்தையும் நிரூபித்தருளுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. பொன்னும் இரும்புமான விலங்குகள் - மோக்ஷ கதிக்கு விரோதியான பலங்களைக் கொடுக்கிறபடியினால் புண்யங்களும் ஒருவகை விலங்கு தான், ஆனாலும் அவைகள் பாபங்களைப்போல நரகவேதனை முதலிய அதிகத் துக்கங்களுக்குக் காரணமல்லாமையினாலே பொன் விலங்கு என்னப்படுகிறது. ஸௌஹார்த்த - ப்ரீதி. நயிப்பிக்க - அழைத்துக் கொண்டுபோக. பண்டு - முன்னால், இறைகொண்ட - காணிக்கைகளை அங்கீகரித்தவர்களான, அதாவது வர்ணாஶ்ரம தர்மானுஷ்டானங்களினால் ஆராதிக்கப்பட்டவர்களான. பரவஶராய் - இவனுடைய பகவத் பக்த்யாதிகளுக்கு வஶப்பட்டவர்களாய், அன்றிக்கே பகவதாஜ்ஞைக்கு வஶப்பட்டவர்களாய், அதிபீதராய் - மிகவும் பயந்தவர்களாய், ப்ரணதிபரராய் - ப்ரணமம் செய்பவர்களாய், காணிக்கையிட்டு - உபஹாரங்களை ஸமர்ப்பிவித்து, காண - ஸேவித்து நிற்க. 'அர்ச்சிஸ்ஸென்றும்' என்றது 'தே அர்ச்சிஷமபிஸம்பவந்தி' (அவர்கள் அக்னியை அடைகிறார்கள்) என்று நிரூபிக்கப்பட்டதை அனுஸரித்து அருளிச் செய்தபடி. 'அக்நி என்றும்' என்றது 'அக்நிர்ஜ்யோதி:' (அக்னி என்கிற ஜ்யோதிஸ்ஸு) என்றதை அனுஸரித்து அருளிச் செய்தபடி. இப்படி இரண்டிடத்திலும் சொல்லப்பட்டவன் ஒருவனே என்று நிர்த்தாரணம் பண்ணியருளினாராயிற்று. ஆதிவாஹிகன் - அதிவஹனம் பண்ணுமவன், வழி நடத்தி வைக்குமவன் என்றபடி. தன்வைபவம் - தன்னுடைய ஐஶ்வர்யாதிகள். 'சூழ் விசும்பணி முகி'லில் - 'சூழ் விசும்பணி முகில்' என்கிற திருவாய்மொழியில். ஸத்காரம் - பஹுமானம், அதாவது பூர்ணகும்பம் கொண்டுவந்து

1. திருவாய்மொழி-10-9-1.

**அநந்தரம் பகலும் ஶுக்லபக்ஷமும் உத்தராயணமும் ஸம்வத்ஸரமும் அடைவே எதிர்கொண்டு வழி நடத்துவார்கள். காலவாதி ஶப்தங்களிற்குக் காலாபிமாநி தேவதைகளைச் சொல்லுகின்றன. ஶாகடாயந ஸம்ஹிதையில் 1 'அக்நிர் அஹஸ்ஸம் ஜ்யோத்ஸ்நீ ஶுக்லபக்ஷ:' என்று பகலுக்கும் ஶுக்லபக்ஷத்திற்கும் நடுவே ஜ்யோத்ஸ்நீ என்றொன்றைச் சொன்னது ஶ்ருதிஸித்தமான க்ரமத்திற்கு அநுகுணமாக ஶுக்லபக்ஷாங்கமாகக் கொள்ளலாம். ஶாகாவிஶேஷத்து ப்ருதிவ்யாதிகளுக்கும் அநேகஶாகாநுகுணமாக நிர்வாஹம் கண்டுகொள்வது.**

---

அழைத்துப்போவது, திருவிளக்குகள் ஸமர்ப்பிப்பது, ப்ரணாமாதிகள் செய்வது, இருப்பிடம் வகுப்பது, கீதங்கள் பாடுவது, புஷ்பமாரி பொழிவது முதலிய பஹுமானங்கள் என்றபடி. **தனக்கடைத்த** எல்லை - தனக்கு நியமிக்கப்பட்டிருக்கும் எல்லை வரையில், **நடத்தும்** - வழி நடத்தி வைக்கும்.

**அநந்தரம்** - பிறகு, அடைவே-க்ரமமாக. பகல் ஶுக்லபக்ஷம் இத்யாதிகள் காலத்தையன்றோ குறிக்கின்றன, இப்படி இருக்க அவர்கள் வழிநடத்துவதும் ஸத்காராதிகளைப் பண்ணுவதும் எப்படி என்னில், அதை நிரூபித்தருளுகிறார்—**'காலவாதி'** என்றாரம்பித்து. **இங்கு** - இந்த அர்ச்சிராதி கதியைச் சொல்லுமிடத்தில். 2 **'ஶுக்லக்ருஷ்ணே கதீ ஹ்யேதே'**, 3 **'த்வே ஸ்ருதீ'** இத்யாதிகளில் இவைகளை மார்க்கங்களாகச் சொல்லியிருப்பதினாலும் காலங்கள் மார்க்கமாகாதாகையினாலும் கதியைச் சொல்லும் இடத்தில் இருக்கிற காலத்தைச் சொல்லும் ஶுக்லபக்ஷாதி பதங்கள் அந்தந்தக் காலாபிமானி தேவதைகளைச் சொல்லுகின்றன என்றபடி. சில இடங்களில் வேறு க்ரமம் சொல்லியிருப்பதற்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் - **'ஶாகடாயந'** என்றாரம்பித்து. **அக்நி:** - அக்னி, **அஹஸ்** - மத்யானம், **ஜ்யோத்ஸ்நீ** - நிலவு. **ஶுக்லபக்ஷாங்கமாக**-ஶுக்ல பக்ஷத்தில் நிலவு அவஶ்யம் இருக்குமாகையினால் நிலவுடன் கூடிய ஶுக்ல பக்ஷம் என்று சொல்லுவதில் தாத்பர்யம் என்றபடி. அநேகம் ஶ்ருதிகளுக்கும் ஆநுகுண்யம் ஏற்படுவதற்காகஇப்படியே அர்த்தம் சொல்லவேண்டும் என்று திருவுள்ளம். **ஶாகாவிஶேஷத்து** - ஒருவித ஶாகையில் சொல்லப்பட்ட. **ப்ருதிவ்யாதிகளுக்கும்** - ப்ருதிவியைத் தாண்டுகிறான், ஜலத்தைத் தாண்டுகிறான் என்று சொல்லப்படும் ப்ருதிவீ முதலியவைகளுக்கும். **அநேகஶாகாநுகுணமாக** - அநேகம் ஶாகைகளில் சொல்லியிருப்பதை அநுஸரித்து. 'ஸர்வஶாகாப்ரத்யயம்' என்கிற ந்யாயத்தினால் அநேகம் ஶ்ருதிகளில் சொல்லியிருப்பதற்கு விரோதம்

---

1. 2. இந்த ப்ரகாசத்தோடு கூடியதும் இருண்டதுமான வழிகள். 3. இந்த வழிகளை.



**ஸம்வத்ஸரதேவதைக்கு அநந்தரம் வாயுதேவதை வந்தெதிர்கொண்டு வழி நடத்தும். இந்த வாயு தன்னை தேவர்களுக்கு இருப்பிடமாகையாலே ஶாஸ்த்ரங்களில் தேவலோகஶப்தத்தாலும் வாயுலோகஶப்தத்தாலும் சொல்லும். வாயுவுக்கு அநந்தரம் ரதசக்ரரந்த்ரம் போலே இருப்பதொரு வழியாலே மேலேபோய் ஆதித்யனைக் கிட்டும். 1 'தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு' என்றும், 2 'மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடு**

---

வராமல் நிர்வஹித்துக் கொள்ளவேண்டியது, அதாவது ஶரீரத்தில் இருக்கும் பஞ்சபூதங்களை விட்டுப் புறப்படுவதையோ, அல்லது அண்டங்களுக்கு ஆவரணமான ப்ருதிவ்யாதி தத்வங்களைத் தாண்டுவதையோ சொல்லுகிறது என்று அறியத்தக்கது.

சில ஶ்ருதிகளில் **'ஸம்வத்ஸராதாதித்யம்'** என்று ஸம்வத்ஸரதேவதைக்கு அப்புறம் ஸூர்யனைச் சொல்லியிருந்தபோதிலும் மற்றும் சிலஶ்ருதிகளில்வாயுவைச் சொல்லியிருப்பதினாலும், 3 **'வாயுமப்தாத் அவிஶேஷவிஶேஷாப்யாம்'** என்று ஸூத்ரகாரரும்நிர்ணயித்திருக்கிறபடியினாலும் வாயுவைநிரூபித்தருளுகிறார்—**'ஸம்வத்ஸர'** என்றாரம்பித்து. சில ஶ்ருதிகளில் ஸம்வத்ஸரத்திற்குப் பிறகு தேவலோகத்தையும், சில ஶ்ருதிகளில் வாயு லோகத்தையும் சொல்லியிருக்கிறபடியினாலே வாயு என்று நிர்ணயிப்பது எப்படி என்னில், அந்த இரண்டும் வாயுவையே சொல்லுகின்றன என்று ஸமாதானம் அருளிச்செய்கிறார்—**'இந்த'** என்றாரம்பித்து. **'தேவர்களுக்கு'** இத்யாதி - வாயுமண்டலத்திலேயே ஸ்வர்க்காதி லோகங்கள் இருக்கிறபடியினால் வாயுலோகமே தேவதைகளுக்கு இருப்பிடம் என்றபடி. **'வாயுலோகம்'** என்றது வாயுவாகிற லோகம் என்றபடி. **ரதசக்ரரந்த்ரம்**போலே - தேர் சக்ரத்திலிருக்கும் த்வாரம் போல. ப்ராக்ருத ப்ரளயத்தில் தேவலோகங்களும் தேவதைகளும் நசித்த பிறகு நசிக்கிற ப்ரும்மா முதலியவர்கள் மோக்ஷத்திற்குப் போகும்பொழுது இந்த வாயு முதலிய மார்க்கங்கள் இல்லையே, அப்படியிருக்க மோக்ஷத்திற்கு ஸூர்யனே வழி என்று சொல்லியிருப்பது எப்படிப்பொருந்தும் என்னில், அதற்கு ஸமாதானம் அருளிச்செய்கிறார்—**'தேரார்'** என்றாரம்பித்து. **தேரார்**-தேரில் நிறைந்திருக்கிற, **நிறைகதிரோன்** - பூர்ணமான கிரணங்களையுடைய ஸூர்யனுடைய, மண்டலத்தை, **கீண்டு** - த்வாரம் செய்துகொண்டு, **புக்கு**-ப்ரவேசித்து. **மன்னும்** - ஸ்திரமான, **கடுங்கதிரோன்** - க்ரூரமான கிரணங்களை

---

1. சிறியதிருமடல். 2. பெரியதிருமடல்.

3. ஸம்வத்ஸரத்தில் இருந்து வாயுவை அடைகிறான், ஒரு இடத்தில் பொதுவாக தேவலோகம் என்றும், மற்றோர் இடத்தில் வாயு என்றும் விசேஷித்துச் சொல்லியிருப்பதினால்.

வுளன்னதோ ரில்லியினூடுபோய்' என்றும், 1 'சண்டமண்டலத்தி னூடு சென்று' என்றும், 2 'இருளகற்று மெரிகதிரோன் மண்டலத் தூடேற்றிவைத்து' என்றும், 3 'ஸூர்யோ த்³வாரமுச்யதே' என்றும், 4 'யோ பி⁴த்வா ஸூர்யமண்ட³லம்' என்றும், 5 'மமைஷ மண்ட³லம் பி⁴த்வா' என்றும் சொல்லுகிற ஸூர்யமண்ட³லபே⁴தா³தி³கள் ப்ராக்ருதப்ரளயாதி³களில் அண்டா³தி⁴பதி முதலானோர் [illegible]ம்போது அபா⁴வங்களாகையாலே இவை இங்குள்ளார்க்காகக் கடவன. ஸூர்யத்³வாரத்தாலே போவார்களென்றது ஶாஸ்த்ரங்களிலே ஆட³ம்ப³ரத்தினுடைய த்³வாரம்போலே யென்று விஶேஷிதமாயிற்று.

---

உடைய ஸூர்யனுடைய, மண்டலத்தின், நன்நடுவுள் - நல்ல மத்யப்ரதேசத்தில், அன்னதோர் - அப்படிப்பட்டதொரு, இல்லியின் - த்வாரத்தின், ஊடு போய் - நடுவாலே சென்று. சண்டமண்டலத்தின் - க்ரூரமான ஸூர்யமண்டலத்தின், ஊடுசென்று, இருள் அகற்றும் - இருட்டைப் போக்கடிக்கிற, எரிகதிரோன் - எரிகிற கிரணங்களை உடைய ஸூர்யனுடைய, மண்டலத்தூடு - மண்டலத்தின் நடுவில், ஏற்றிவைத்து - ஏறும்படி செய்து. **ஸூர்ய:** - ஸூர்யன், **த்³வாரம்** - வழியாக, **உச்யதே** - சொல்லப்படுகிறான். **ய:** - எந்த வழி, **ஸூர்யமண்ட³லம்** - ஸூர்யனுடைய மண்டலத்தை, **பி⁴த்வா** - பிளந்து கொண்டு (மேலே போகிறதோ). **ஏஷ:** - இவன், **மம** - என்னுடைய, **மண்ட³லம்** - மண்டலத்தை, **பி⁴த்வா** - பிளந்து கொண்டு (போகப்போகிறான்). **ஸூர்யமண்ட³லபே⁴தா³தி³கள்** - ஸூர்யமண்டலத்தைப் பிளப்பது முதலியவைகள். '**ஸூர்ய**' பதம் சந்திரனைக்கிட்டுவதைக் குறிக்கிறது. **ப்ராக்ருதப்ரளயாதி³களில்** - ப்ரக்ருதியைச் சேர்ந்த எல்லா வஸ்துக்களுக்கும் லயம் ஏற்படும் ஸமயத்தில். **அண்டா³தி⁴பதி** - அண்டத்திற்கு யஜமானனாகிய ப்ரும்மா, முதலானோர் - முதலியவர்கள், அதாவது அந்த ஸூர்யன் சந்திரன் முதலியவர்கள் என்றபடி. **அபா⁴வ**ங்களாகையாலே - வஸ்துக்கள் இல்லாமல் போய் விட்டபடியால், ஸூர்யன் முதலியவர்கள் அப்பொழுது இல்லாமையினால் என்றபடி. இங்குள்ளார்க்கு-இந்தப்பூலோகம் முதலியவற்றில் இருக்குமவர்களுக்கு, ஆகக்கடவன - உண்டாகக் கூடியவைகள் என்றபடி. **ஸூர்யத்³வார**த்தாலே - ஸூர்யன் இடத்தில் இருக்கிற வழியாலே. **ஆட³ம்ப³ர**த்தினுடைய-ஆடம்பரம் என்கிற வாத்ய விசேஷத்தினுடைய, **த்³வாரம்**போலே - த்வாரம்போலே, அதாவது ஸூர்யமண்டலத்தில் இருக்கும் த்வாரம் ஆடம்பரத்தி

1. திருச்சந்தவிருத்தம்-67. 2. பெரியாழ்வார் திருமொழி-4-9-3.
3. 4. யாஜ்ஞவல்க்யஸம்ருதி-4-167. 5.



ஸாபேக்ஷ: । அந்யதா² ஸாமக்³ரீமநபேக்ஷ்ய ஸர்வேஷாம் ப்ரத்யேகம் கார்யகாரணப்ரஸங்கே³ யத்ர க்வாபி தே³ஶகாலேஷ்வீஶ்வராதே³: ஸர்வதா³ ஸந்நிஹிதத்வேந ஸர்வம் கார்யம் ஸர்வத்ர ப்ரஸஜ்யேத । தத: ப்ரேக்ஷாவதாம் ப்ரயத்நவைப²ல்யம் ஶாஸ்த்ரீய விதி⁴நிஷேதா⁴தி³ வையர்த்²யம் ச ஸ்யாத் — ஸர்வத்ர ஸர்வபுருஷார்த²ஸித்⁴யே: து³:கா²நாம் ச து³ஷ்பரிஹரத்வாத் । யதா² 'நிர்மால்யம் ச நிவேத்³யம் ச' இத்யஸ்யார்த²: — நிர்மால்யம் ருத்³ராதி³ நிவேதி³தம் ப்ரஸித்³தி⁴ வஶாத் தாவத் ஸித்³த⁴ம் । ப⁴க³வந்நிவேதி³தே நிர்மால்யஶப்³த³ப்ரயோக³மாத்ரம் நிஷித்⁴யதே । யதா²ஹ ஸம்ஹிதாயாம் — "நிர்மால்யபு³த்³த்⁴யா தே³வேஶம்" இத்யாதி³ । நிவேத்³யம் நிவேத³நயோக்³யம் நிவேத³நாய பரிகல்பிதமித்யர்த²: । நிவேத³நாய பரிகல்பிதஸ்ய போ⁴ஜநேऽபி தோ³ஷாபா⁴வ: । யதா²

---

அப்படிக்கில்லாவிடில் ஸாமக்ரிகளை (அதாவது எல்லாக் காரணங்களும் சேர்ந்திருப்பதை) அபேக்ஷிக்காமல் எல்லாக்காரணங்களும் தனித்தனியே கார்யங்களை உண்டுபண்ணுகின்றன என்று சொல்லவேண்டிவருமாதலாலே எதாவதுஒரு தேசம்காலம் ஈச்வரன் முதலிய காரணங்கள் எல்லாஇடத்திலும் இருக்கிறபடியினால் எல்லாக் கார்யங்களும் எல்லா இடங்களிலும் உண்டாகவேண்டிவரும். அப்படியானால் புத்திமான்கள் சில கார்யங்களுக்காக ப்ரயத்தனம் செய்யவேண்டியது இல்லாமல் போகவேண்டிவரும், சாஸ்திரங்களில் சில கார்யங்களைச் செய்யும்படி விதித்திருப்பதும் சிலகார்யங்களைச் செய்யக்கூடாது என்று மறுத்திருப்பதும் வீணாகப்போகவேண்டிவரும்—ஏனெனில் ஒரு ப்ரயத்தனமும் செய்யாமலே எல்லா இடத்திலும் எல்லாப் பலங்களும் கிடைக்குமாதலாலும், துக்கங்கள் பரிஹரிக்க முடியாதாகையினாலும். அன்றிக்கே 'நிர்மால்யத்தையும் நிவேத்யத்தையும்' என்று சொல்லியிருப்பதற்கு அர்த்தம் இது, எதுவென்னில்:—நிர்மால்யம் என்பது ருத்திரன் முதலிய தேவதைகளுக்கு நிவேதனம் செய்யப்பட்டது என்பது ப்ரஸித்தி இருக்கிறபடியினால் ஸித்தித்துவிட்டது. பகவானுக்கு நிவேதனம்செய்யப்பட்ட வஸ்துவினிடத்தில் நிர்மால்யம் என்கிற சப்தத்தின் ப்ரயோகமே செய்யக்கூடாது என்று மறுக்கப்படுகிறது. எப்படி என்னில்:—ஈச்வர ஸம்ஹிதையில், 'பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை நிர்மால்யம் என்கிற புத்தியினால் எவன் தள்ளுகிறானோ' என்றிவை முதலியது சொல்லப்பட்டிருக்கிறது. நிவேத்யமாவது பகவானுக்கு நிவேதனம் செய்யப்படவேண்டியது, அதாவது நிவேதனம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றர்த்தம். அப்படிப் பகவானுக்கு நிவேதனம்செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டதை ஸாப்பிட்டாலும் தோஷமின்று

[illegible]

என்று சொல்லுகிறுர்கள். அப்படியே பௌஷ்கர ஸம்ஹிதையில் விஷ்வக்ஸேநாத்யாயத்தில் 'ப்ரயத்தினத்தினுல் தேவதைகளினுடைய ஆராதனத்திற்காக என்று முன்னுல் ஏற்படுத்தப்பட்டதை அவர்களுக்கு ஸமர்ப்பிக்கப்படுகிற வரையில் அது தேவாங்கம் என்று சொல்லப்படுகிறது. வேறு விதமாக ப்ரமித்து அஜ்ஞானத்தினுல் அது ஸாப்பிடப்பட்டதேயானுல் அதை ஸாப்பிட்ட மனிதன் அனேகம் ப்ராயச்சித்தங்களை அனுஷ்டித்தபிறகு பரிசுத்தனுகிறுன், ஆராதனம் செய்பவர்களுக்குள் ச்ரேஷ்டனுனவனே! அப்படி ஆராதனம் செய்பவர்களாயும் கர்வத்தோடுகூடிய புத்தி இல்லாதவர்களாயும் இருப்பவர்களுக்கு வஹ்நிஸந்தர்ப்பணம் முடிந்த பிறகு அதை ஸாப்பிடுவது எல்லாவிதப் பரிசுத்தியையும் செய்யும், பரிசுத்தம் செய்யக்கூடியதும் புண்யத்தை உண்டாக்கக்கூடியதும் அடிக்கடி அதிகமான ஸம்பத்தை வ்ருத்திசெய்யக்கூடியதும் ஆகும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இத்தால் 'வீணுகக் க்ருஸரம், பாயஸம், வடை, யஜ்ஞாதிகளில் உபயோகப்படுத்தப்படாத மாம்ஸம், தேவான்னங்கள், ஹவிஸ்ஸுக்கள் இவைகளை ஸாப்பிடக்கூடாது' என்கிற மனுவின் வசனமும் அர்த்தம் சொல்லப்பட்டதாயிற்று— நிவேதனம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட வஸ்துவில் தேவான்னம் என்கிற பதத்தை பெயராக ப்ரயோகித்திருக்கிற படியினுல் அந்த அர்த்தத்தையே சொல்லுகிறது என்பது ஸம்பவிக்கும் இடத்தில் அதற்கு விரோதமான அர்த்தத்தைக் கல்பிப்பது பொருந்தாததலாலும் மனு முதலியவர்களினுடைய தர்ம சாஸ்திரமும் சித்திரசிகண்டி என்பவரால் செய்யப்பட்ட பாஞ்சராத்திர சாஸ்திரத்தையே மூலமாகஉடையதுஎன்பது மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருப்பதினுல் மூலத்திற்குவிரோதம் வருகிறபடியினுலும். அப்படியே உபரிசரவஸுவின் கதை



[illegible]

யைச் சொல்லுமிடத்தில் 'ஸ்வாயம்புவர்என்கிறமனு அந்தப் பாஞ்சராத்திர சாஸ்திரத்தில் இருந்து தர்மங்களைச் சொல்லப்போகிறுர். சுக்ரனும் ப்ருஹஸ்பதியும் எப்பொழுது உண்டாகப்போகிறுர்களோ அப்பொழுது அவர்கள் உங்களுடைய மதத்தில் இருந்து எடுக்கப்பட்ட சாஸ்திரத்தைச் சொல்லப்போகிறுர்கள்', என்னும்படி 'இது எல்லா சாஸ்திரங்களுக்கும் உத்தமம் என்றும் சொல்லப்பட்ட சாஸ்திரம்'என்றும்சொல்லப்பட்டிருக்கிறது. 'மனுசொல்லியிருக்கிற அர்த்தத்திற்கு எந்த ஸ்ம்ருதி விரோதமான அர்த்தத்தைச் சொல்லுகிறதோ அது சிறந்ததாகாது' என்று வேறு ஸ்ம்ருதிகளில் சொல்லியிருப்பதினுலேயே மனு ஸ்ம்ருதியைவிட மற்ற ஸ்ம்ருதிகள் துர்பலங்களாகையினுல் மனு ஸ்ம்ருதியினுல் அபேக்ஷிக்கப்படுகிற பகவச்சாஸ்திரத்திற்கு விரோதம்வரில் அவைகள் மறுக்கப்படுகின்றன. அன்றிக்கே 'நிர்மால்யத்தையும் நிவேத்யத்தையும்' என்கிற இரண்டு பதங்களும் ருத்திரனைச்சேர்ந்த வஸ்துக்களைப்பற்றியது. அப்படியே அவர்களாலேயே ஆறுவிதமான நிர்மால்யத்தை நிரூபிக்கும்இடத்தில் நிர்மால்யமும் நிவேத்யமும், என்று அதின் உட்பிரிவான இரண்டு வ்யத்யாஸங்களாகச் சொல்லப்பட்டது. அவர்களுடைய ஸித்தாந்த ஸாரபத்ததி என்னும் க்ரந்தத்தில் ப்ராயச்சித்தம் சொல்லுமிடத்தில் 'புத்திபூர்வகமாகயிராமல் நிர்மால்யத்தை ஸாப்பிட்டால் ப்ரும்மபஞ்சகம் என்கிற மந்திரங்களை ஒன்றை ஆயிரம்தடவை ஆவ்ருத்திசெய்யவேண்டும், புத்தியுடன் கூடஸாப்பிட்டானேயானுல் யஜ்ஞத்தில் தீக்ஷை செய்துகொள்ளுவதினுல் சுத்திஅடைகிறுன். நிர்மால்யத்தின் பிரிவுகளும் தேவஸ்வம், தேவத்ரவ்யம் நிவேத்

षाः कथ्यन्ते — देवस्वं देवद्रव्यं नैवेद्यं निवेदितं चण्ड-
द्रव्यं निर्माल्यं चेति। देवस्वं नाम ग्रामादि देवस्वं, वस्त्रा-
द्याभरणादि देवद्रव्यं, निवेदनार्थं परिकल्पितं नैवेद्यं,
तद्देवताभ्यो निवेदितं निवेदितं, चण्डाय दत्तं चण्डद्रव्यं, बहि-
र्निक्षिप्तं निर्माल्यं। विसर्जितेऽपि देवे विना कालं यत्तु
तिष्ठति पात्रस्थं तदपि निर्माल्यं भवति। षड्विधमपि निर्माल्यं न जिघ्रेच्च न लङ्घ-
येच्च न दद्याच्च न विक्रीणीयाच्च, दत्त्वा क्रव्यादो भवति, भक्षणा-
न्मातङ्गः, लङ्घने सिद्धिहानिः, घ्राणे वृकः, स्पर्शने स्त्री-
त्वं, क्रयदाने चण्डालः, विक्रये शबरः इति। उक्तं च भगव-
च्छास्त्रेऽपि पाञ्चरात्रे संहितायामैश्वरायामाराधनाध्याये स्कन्दः
“त्वया निषिद्धं द्रव्याणां दत्तस्य भक्षणं सर्वशः। सर्वत्र च
प्रशंसनं वर्धयस्व परमेश्वर। तस्यैतानीं प्रदानं च
प्राशनं संप्रशंससि। इदं तत्र मे जातः संशयः परमे-

யம், நிவேதிதம், சண்டத்ரவ்யம், நிர்மால்யம், என்று பிரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. தேவஸ்வமாவது தேவதைகளினுடைய க்ராமம் முதலியவைகள், வஸ்திரம் முதலிய அலங்காரத்திற்குபயோகமான வஸ்துக்கள் தேவத்ரவ்யம், நிவேதனம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது நிவேத்யம், தேவதைகளுக்கு நிவேதனம் செய்யப்பட்டது நிவேதிதம், சண்டிகேச்வரனுக்கு உபயோகப்படுத்தப்பட்டது சண்டத்ரவ்யம், வெளியில்போடப்பட்டது நிர்மால்யம், தேவதைகளுக்கு ஸமர்ப்பிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அந்தப் பாத்திரத்திலேயே எது இருக்கிறதோ அதுவும் நிர்மால்யமாகிறது. இந்த ஆறுவிதமான நிர்மால்யத்தையும் முகரக்கூடாது, தாண்டக்கூடாது, ஒருவனுக்குக் கொடுக்கவும்கூடாது, விற்கவும் கூடாது, கொடுத்தால் மாம்ஸத்தை ஸாப்பிடும் ஜந்துக்களாகப் பிறப்பான், ஸாப்பிட்டால் யானையாகப் பிறப்பான், தாண்டினால் மந்திரஸித்திக்குக் குறைவுநேரிடும், முகர்ந்தால் செந்நாயாய்ப் பிறப்பான், தொட்டால் ஸ்திரீயாகப் பிறப்பான், வாங்கினால் சண்டாளனாகப் பிறப்பான், விற்றால் வேடனாகப் பிறப்பான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாஞ்சராத்திர சாஸ்திரத்திலும் ஈஸ்வர ஸம்ஹிதையில் ஆராதனத்தைச் சொல்லும் அத்யாயத்தில் ஸுப்ரமண்யன் கேட்கிறார்—ஓ! பரமேச்வரனே! உம்மால் மந்திரபூர்வகமாகக் கொடுக்கப்பட்ட புஷ்பம் அன்னம் முதலிய வஸ்துவிற்கு எல்லா இடத்திலும் நிஷேதம் (ஸாப்பிடக் கூடாதுஎன்று) சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது அதைக் கொடுப்பதையும் அதை ஸாப்பிடுவதையும் ஸ்தோத்திரம் செய்கிறீர் இது என்ன? இந்த விஷயத்தில் ஓ! பரமேச்வரனே எனக்கு ஸந்தேஹம் உண்டாய் இருக்கிறது'—என்று.



श्वर। प्रदानं प्राशनं चात्र उपभोग्यमेव च। शैव-
पाशुपतोक्तेषु दोषाढ्यं पातकप्रदम्। तद्वैष्ण-
वशास्त्रोक्तवर्त्मना तद्विरुद्धं दानादनन्तफलदं, प्राशनात्कोटि-
पातकेभ्यो विशोधकम्। क्षयं नयति पापानि पुण्यवृद्धिं करो-
ति च। दानैर्यज्ञैस्तपोभिश्च पुण्यैर्यत्प्राप्यते फलं तत्
फलं भगवद्दत्तप्राशनाद्दानतोऽपि च॥” इति।
तस्मिन्नेवाध्याये सोमपानादपि पावनत्वं भगवन्निवेदितस्य प्रतिपादि-
तम्। तथाहि — “क्लेशेन महता चैव प्राप्तं पश्वालम्भादि-
ना यज्ञान्ते सोमपानं तु संस्कृतं पश्चात्कर्मणि। तस्य
तद्वैष्णवैः मन्त्रैर्जपैर्योग्यता यदा। तदा पावना-
ति तत्सर्वं विप्राणां यज्वयाजिनाम्। किं पुनर्यस्य प्रभावा-
न्वेत्ति विष्णोर्मौनव्रतादिभिः। संस्कृतस्य स्वायितं य
दैवं सर्वं संशोधितं पावनः। उत्तमैस्तत्त्वसंवेदितन सं

(ருத்திரன் பதில்சொல்லுகிறார்) ஓ! புத்திரனே! கொடுப்பதும் ஸாப்பிடுவதும் அது அனுபவிக்கக்கூடியது என்பதும் சைவபாசுபத சாஸ்திரங்களின்படி தோஷத்தையுடையது அதிசீக்கிரத்திலேயே பாபத்தை உண்டாக்கக்கூடியது. அதுவே விஷ்ணுவைச்சேர்ந்த சாஸ்திரத்தில் சொல்லிய வழியில் அதற்கு விரோதமாகஇருக்கிறது அது கொடுப்பதினால் அளவில்லாத பலத்தைக் கொடுக்கிறது. ஸாப்பிடுவதினால் கோடி பாபங்களில் இருந்து பரிசுத்தம்செய்கிறது. பாபங்களைப் போக்கடிக்கிறது. புண்யங்களை வ்ருத்திசெய்கிறது. நம்மால் செய்யப்படுகிற தானங்களாலும் தர்மங்களாலும் புண்யங்களினாலும் தபஸ்ஸுக்களினாலும் எந்தப் பலம் உண்டாகிறதோ அந்தப்பலம் பகவானுக்கு நிவேதனம் செய்ததைக் கொடுப்பதினாலும் அதை ஸாப்பிடுவதினாலும் உண்டாகிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அத்யாயத்திலேயே பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை ஸாப்பிடுவது ஸோமபானத்தைக் காட்டிலும் பரிசுத்தியைச் செய்யக்கூடியது என்பது விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எப்படிஎன்னில்:— ஓ! புத்திரனே! யஜ்ஞம் செய்கிற ப்ராம்மணர்களுக்கு அதிகக்கஷ்டத்தினால் பசுவை வதம்செய்வது முதலியவைகளினால் யஜ்ஞத்தின் முடிவில் அடையப்பட்ட ஸோமபானம் அந்த யஜ்ஞமாகிற கர்மத்தில் வைஷ்ணவ மந்திரங்களை ஜபிப்பதினால் அந்தக் கர்மத்திற்கு யோக்யமாகக்கூடியதன்மை எப்பொழுது உண்டாயிற்றோ அப்பொழுது அதுபரிசுத்தம்செய்கிறது. அந்தப் பகவானுடையப்ரபாவத்தை அறிந்தவர்களாய் மௌனவ்ரதம் முதலியவைகளுடன் கூடினவர்களாய் இருக்கிறவர்களினால் உத்தமமான மந்திரங்களினால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டதாய், மந்திரம் முத்ரை

[illegible]

இவைகளுடன்கூடிய த்யானத்தினல் பரிசுத்தம் செய்யப்பட்டதாய், மந்திர ஸ்வரூபியாயும் எல்லாலோகத்திற்கும் குருவாயும் இருக்கும் பகவானிடத்தில் அந்தப்பகவானைப்பற்றிய மந்திரத்தினலேயே நிவேதனம் செய்யப்பட்டதாய், மந்திரம்தெரிந்த மஹாத்மாவிற்கு மந்திரத்தினலேயே கொடுக்கப்பட்டதாய், அநாதியான பாஞ்சராத்திர சாஸ்திரங்களில் சொல்லிய வசனங்களால் செய்யப்பட்டது எதுவோ அதைக்கொடுப்பதினலும் அதை ஸாப்பிடுவதினலும் அது ஸம்ஸாரத்தைவிட்டுத் தாண்டுவிக்கிறது என்பதைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை, அது ஸ்ருஷ்டிகாலம் முதல் பரிசுத்தமானது, தேவதைகளினல் ஸேவிக்கப்பட்டது. ஸித்தர்களாலும் தேவர்களினலும் கொண்டாடப்பட்டது. பகவத் பக்தர்களினல் ஸ்தோத்திரம் செய்யப்பட்டது. பரமாத்ம ஸ்வரூபிகளான பாகவதர்களினல் கொடுக்கப்பட்டது. ஆத்மஸ்வரூபம் தெரிந்தவர்களினல் அங்கீகரிக்கப்பட்டது. கர்மத்தில் நிஷ்டையுடையவர்களினல் ரக்ஷிக்கத்தக்கது, யஜ்ஞம் செய்தவர்களினல் கொண்டாடப்பட்டது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலேயே பத்தாவது அத்யாயத்தில் ஸமயாசாரங்களை உபதேசம் செய்வதின் மஹிமையைச் சொல்லுமிடத்தில் 'பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட எல்லாவஸ்துவைப் பற்றிப் பக்தியில்லாமையினல் உண்டாகிய ஸாதாரணமான கேவலம் அன்னம் முதலியபதங்களினல் சொன்னபோதிலும் நிர்மால்யம் என்கிற புத்தியினல் தூஷித்தபோதிலும் அதிக தோஷம் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'பகவானல் அனுபவிக்கப்பட்டிருக்கிற சந்தனம் புஷ்பம் முதலிய எல்லாவஸ்துக்களையும் திருமஞ்சனத்தில் உபயோகப்படுத்தப்பட்ட பால் தயிர் முதலியவைகளையும் பற்றி அவிச்வாஸத்தினல் உண்டான சப்தங்களை உபயோகித்து



[illegible]

தூஷணம்செய்யக்கூடாது. பகவானுடையதாய் பரிசுத்தமான நிவேதிதத்தை நிர்மால்யம் என்கிற புத்தியினல் எவர்கள் தூஷிக்கிறர்களோ, அப்படிப்பட்ட பகவானுடைய மஹிமையை அபலாபம்செய்கிற மூடர்கள் நரகத்தை அடைகிறர்கள். ப்ரத்யக்ஷமாகிய ப்ரமாணத்தினலும் லோகத்தில் கண்டறிந்த காரணத்தினலும் சிஷ்டர்களினல் அனுஷ்டிக்கப்பட்டிருப்பதினலும் பகவானைச் சேர்ந்ததான பாத்ய தீர்த்தம்வரையிலான எல்லா வஸ்துவிற்கும் தேவதைகளினல் கொண்டாடப்பட்டிருக்கும் பெருமையும், பரிசுத்தம்செய்யக்கூடிய தன்மையும் ஸித்தமாயிற்று' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் 'சந்தனம் புஷ்பம் முதலிய என்கிற இடத்தில் முதலிய என்பதினல் திவ்ய சூர்ணமும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. சந்தனம் புஷ்பம் முதலாக பாத்யதீர்த்தம்வரையிலான எல்லாவற்றிற்கும் என்று பகவானல் அனுபவிக்கப்பட்ட எல்லாவஸ்துக்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிறது என்பது ஏற்படுகிறது. அப்படியே ஈச்வரஸம்ஹிதையில் 'குங்குமம் சந்தனம் திருமேனியில் சாற்றப்பட்ட கர்ப்பூரம் இது எல்லாம் பகவானுடைய திருமேனியில் ஸம்பந்தப்பட்டிருக்கிறபடியினல் மிகவும் பரிசுத்திசெய்யக்கூடியது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே பாத்மோத்தரத்தில், 'பகவானுடைய திருமேனியில் ஸம்பந்தப்பட்ட சூர்ணத்தை எவன் தலையில் தரிப்பனே அவன் அச்வமேதயாகம் செய்தவனுடைய பலத்தைஅடைந்து விஷ்ணுவின் லோகத்தில் கொண்டாடப்படுகிறன்' என்றும், அப்படியே மற்ருேரிடத்திலும் 'விஷ்ணுவினுடைய திருமேனியில் இருந்து கீழேவிழுந்ததான சூர்ணத்தை எந்த ப்ராம்மணன் நெற்றியில் தரிப்பானே அவன்

𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥" 𑌇𑌤𑌿 । 𑌅𑌨𑍇𑌨 𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌪𑌾𑌦𑍋𑌦𑌕𑌦𑌿𑌵𑍍𑌯𑌚𑍂𑌰𑍍𑌣𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌪𑌿 𑌨 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌲𑍍𑌯𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌿𑌧𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌤𑍇 । 𑌯𑌥𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑌾𑌣𑍇— "𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌨𑍈𑌵𑍇𑌦𑍍𑌯𑌕𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌰𑍍𑌭𑍋𑌜𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌨𑍍𑌯𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌲𑍍𑌯𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 । 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌦𑍇𑌹𑌸𑌮𑌾𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌂 𑌮𑌾𑌲𑍍𑌯𑌂 𑌪𑌾𑌪𑌹𑌰𑌂 𑌶𑍁𑌭𑌮𑍍 । 𑌯𑍋 𑌨𑌰𑌃 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ॥" 𑌇𑌤𑌿 । 𑌶𑍍𑌰𑍀𑌵𑍈𑌖𑌾𑌨𑌸𑍇 𑌅𑌤𑍍𑌰𑌿𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌮𑍍 — "𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌪𑌾𑌦𑍇 𑌯𑌦𑍍𑌦𑌤𑍍𑌤𑌂 𑌤𑌦𑍍𑌵𑍈 𑌪𑌾𑌦𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌪𑌾𑌦𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑌾𑌦𑌾𑌯 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍈𑌵 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌮𑍍 । 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌨𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌯𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥" 𑌇𑌤𑌿 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑍇— "𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌯𑌾𑌨𑌿 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌤𑍇𑌷𑍁 𑌸𑍍𑌨𑌾𑌨𑍇𑌷𑍁 𑌯𑌤𑍍𑌫𑌲𑌮𑍍 । 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌾𑌦𑍋𑌦𑌕𑌂 𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌸𑍌 । 𑌮𑌾𑌨𑌵𑍋 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌗𑌙𑍍𑌗𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌨𑌾𑌨𑌪𑌾𑌨𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌤𑍍 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂

---

எல்லாப்பாபங்களையும் நீக்கிவிட்டு ஸ்வர்கலோகத்தில் தேவதைகளுடன் ஆநந்தத்தை அநுபவிக்கிறான்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தால் பாத்யதீர்த்தம், திவ்யசூர்ணம், மாலைகள், முதலியவைகளும் நிர்மால்யம் என்னும் பதத்தினால் சொல்லக்கூடியவைகள் அல்ல என்பது ஏற்பட்டது. மற்ற இடங்களிலும் அவைகளை உபயோகிக்கவேண்டும் என்கிற விதி அறியப்படுகிறது. ப்ராம்மபுராணத்தில் 'விஷ்ணுவிற்கு நிவேதனம் செய்யப்பட்டது மிகவும் பரிசுத்தமானது, ரிஷிகளினால் ஸாப்பிடக்கூடியது என்று சொல்லப்படுகிறது. அதைத்தவிர மற்ற நிவேதனம் செய்யப்பட்டவஸ்துக்கள் நிர்மால்யம் என்று சொல்லப்படுகிறது. அதை ஸாப்பிட்டால் சாந்திராயணவ்ரதம் இருக்கவேண்டும் விஷ்ணுவினுடைய திருமேனியில் ஸம்பந்தப்பட்டதாயும் எல்லாப் பாபங்களையும் போக்கடிக்கக்கூடியதுமான மாலையை எந்தமனிதன் தலையில் தரிக்கிறானே அவன் உயர்ந்தகதியை அடைகிறான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. வைகானஸ சாஸ்த்திரத்திலும் அத்ரி ஸம்ஹிதையில் 'பகவான் இடத்தில் திருவடிகளில் மந்திரத்தினால் ஸமர்ப்பிக்கப்பட்டது எதுவோ அது பாத்யமென்று சொல்லப்படுகிறது. அந்தப் பாத தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு பக்தியினால் பகவானை த்யானம் செய்துகொண்டு எவன் தன்னை ப்ரோக்ஷணம் செய்துகொள்ளுவானோ அவன் எல்லாப் பாபங்களினாலும் விடப்படுகிறான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரும்மாண்ட புராணத்தில் 'பூமியில் எவ்வளவு தீர்த்தங்கள் இருக்கின்றனவோ அவைகளில் எல்லாவற்றிலும் ஸ்நானம் செய்கிறதில் என்ன பலன் உண்டாகிறதோ அவ்வளவு பல[illegible]னுடைய பாத்ய தீர்த்தத்தைத் தலையில் தரிப்பதினால் [illegible] மனிதன் கங்கையில் ஸ்நானம் பானம்

## அறிவிப்பு

நமக்கு ஒருகக்ஷியில் அபிமானமுண்டு என்று சிலர் அபிப்ராயப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அது மிகவும் தப்பான அபிப்ராயம். நமக்கு எல்லாம் ஸமமேதவிர ஒரு இடத்திலும் பக்ஷபாதமில்லை.





## ரோஜா மொக்கு முத்துமாலைகள்.
### 26-தினுஸுகள்.

இந்த முத்துக்கள் ஆச்சர்யப்படும்படியான ப்ரகாசமுடையவை. அவைகளை நிஜமானவும், போலிமுத்துக்களுடன் வைத்துப்பாருங்கள். நிஜமுத்தைவிட மட்டம் என்று தோன்றினாலும் போலிமுத்துக்களைக்காட்டிலும் உத்க்ருஷ்டம் என்று உங்களுக்குத் தோன்றாவிட்டாலும் வாங்கின 8-தினங்களுக்குள் மாலையை வாப்ஸ் செய்தால் கொடுக்கப்பட்ட பணம் திருப்பி அனுப்பப்படும். 18-அங்குல நீளமுள்ள தங்கமுகப்புடைய மாலை ம்ருதுவானபட்டால் மூடப்பட்ட அழகான சிறுபெட்டியுடன் ரூ 8-க்கு வி. பி. யில் அனுப்பப்படும். ஏமாறாமல் முன்னமேயே எழுதித் தருவித்துக்கொள்ளுங்கள். பலவித மோஸ்தர்களாய் 16-விதமான வர்ணத்தில் வாஸனையுடன் கூடினதாகச் செய்யப்பட்டிருக்கிறது.

## அப்பு என்ற அலூமினியம் சோப்பு.

ஐரோப்பாவில் ஒருபெரிய தொழிற்சாலையில் தயார் செய்யப்பட்டது. அவலக்ஷணமான அலூமினியம் பாத்ரங்களை உபயோகப்படுத்தி உங்களுடைய தேஹாரோக்யத்தை ஏன் பாழுபண்ணுகிறீர்கள். இந்த ஸோப்பை உபயோகித்துக் கழுவி சுத்திசெய்துகொள்ளுங்கள். இது சுத்திசெய்து மெருகு கொடுக்கும். 100-பாத்ரங்களை சுத்திசெய்ய ஒரே சோப் போதுமானது. உலகத்திலிருக்கும் ஹாஸ்டல்கள், போஜனசாலை ஹோட்டல்கள், ஆஸ்பத்திரிகளில் இது உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

சின்னப்பெட்டி 10-அணா, பெரியபெட்டி ரூ 1—4—0.

ஸ்வல்பமாய் வாங்கினால் வி. பி. யில் அனுப்பமுடியாது. அலூமினியம் ஸோப்புக்கு முன் பணமாகவே கட்டவேண்டும்.

International Buildings, Ludhiana (Punjab)

Distributors: Agencia Mercantil -y- Martima.

## ச்ருதப்ரகாசிகா ஸஹிதம், ஸ்ரீபாஷ்யம் தமிழ்மொழி பெயர்ப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் ஸஞ்சிகை (லகுஸித்தாந்தம் முடிய) | ரூ. ... | 1 | 4 | 0 |
| 2-வது மஹா பூர்வபக்ஷம் முடிய | ... | 0 | 10 | 0 |
| 3-வது ஜிஜ்ஞாஸாதிகரணம் | ... | 0 | 12 | 0 |
| ஸ்ரீ வசநபூஷண ப்ரமாணத்திரட்டு அரும்பத விளக்கம் | ... | 1 | 4 | 0 |
| திருவாய்மொழி ஈட்டின் ப்ரமாணத்திரட்டு முதல் 3-பத்து | ... | 0 | 12 | 0 |

திருப்புறம்பியம் போஸ்டு, கும்பகோணம்.

T. D. ராமஸ்வாமி நாயுடு

## ஸபையின் சாச்வதபண்டுக்கு உபகரித்தவர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ உப. | வெ. ஸ்ரீநிவாஸஅய்யங்கார்—காளையார்கோவில் | 1 | 0 | 0 |
| ,, | P. D. க்ருஷ்ணஸ்வாமிஅய்யங்கார், ஆடுதுறை | 1 | 0 | 0 |
| ஸ்ரீமான் | காமாக்ஷிபிள்ளை—கருங்கல்பாளையம் | 5 | 0 | 0 |
| ,, | க்ருஷ்ணகவுண்டர்—பள்ளிக்குளம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீ உப. | K. S. க்ருஷ்ணஸ்வாமிஅய்யங்கார்—ஸ்ரீரங்கம் | 1 | 0 | 0 |
| ,, | N. க்ருஷ்ணமாசார்யர்—திருவெட்டிபுரம் | 1 | 0 | 0 |
| ,, | S. ஸ்ரீநிவாஸபட்டாசார்யர்—ஸ்ரீரங்கம் | 1 | 0 | 0 |

## பதினைந்தாவது வார்ஷிக மஹாசங்கம்

முன் ஸஞ்சிகையில் குறிக்கப்பட்டிருந்தபடி இதை இந்த வருஷம் திருக்குருகூரில் நடத்துவதற்காகவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மழையினால் ஏற்பட்டிருக்கும் போக்குவரத்து ஸௌகர்யக்குறைவினால் அதை அங்கு நடத்தஸாத்யப்படவில்லை. ஆகையினால் அதை இந்த சென்னையிலேயே நடத்தவேண்டியதாய் இருக்கிறது. மிகவும் சிறியகாலத்திற்குள்ளே எல்லாவித ஏற்பாடுகளும் செய்யவேண்டியதாகிவிட்டபடியினால் சென்ற வருஷங்களில் போல விசேஷமாக நடத்தமுடியவில்லை.

இது இந்த டிசம்பர்மீ 27உ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீமான் உப்பட்டூர் ஆழ்வார் செட்டியாரின் ராமாநுஜகூடத்தில் பகல் 2-மணிக்கு உபக்ரமிக்கும். வழக்கம்போல் உபந்யாஸங்கள் நடைபெறும். மெம்பர்களும் இன்னும் எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் எழுந்தருளி ஸதஸ்ஸை அலங்கரித்து உபந்யாஸங்களைக்கேட்டு ஆனந்திக்கவேணுமாய் ப்ரார்த்திக்கப்படுகிறது.

ஆஹ்வானபத்ரம் வருஷாந்த அறிக்கையுடன் அச்சிட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. வித்வதுபந்யாஸங்களின் செலவிற்காக மெம்பர்களனைவரும் தங்களாலியன்றமட்டும் த்ரவ்ய ஸஹாயம் செய்யவேணுமாய் ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். டிசம்பர்மீ 26உக்கு முன் கார்யதர்சிக்கு வந்துசேரும்படி அனுப்பினால் உபகாரமாக இருக்கும்.

இது ஸத்விஷயமானதால் இதில் செல்வானது அவர்களுடைய க்ஷேமத்தை உண்டுபண்ணக் கூடியதாதலால் இதை எல்லோரும் க்ருபையுடன் ஆதரித்து உபகரிக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ர. ஸ்ரீநிவாஸராகவன்,
கார்யதர்சி.